2017 மார்ச் 06
திங்கள்
விலை: 20/-
ஹிஜ்ரி 1438 ஜ.ஆகிர் பிறை 06 · பக்கங்கள் 12 · மணி 03 · ஒளி 037
QD / 154 / NEWS / 2017
NAVAMANI DAILY · නවමණි දිනපතා

# நவமணி

தமிழ்பேசும ளின் சுதந்திரமான குரல்



மஹிந்தவின் பிரஜா உரிமை பறிப்பில் எதிரணிக்கே அதிக விருப்பு 07 »



தனுஷ்க - குசல் அபாரம்; இலங்கைக்கு அபார வெற்றி 12 »



முஸ்லிம் கூட்டமைப்பு காலத்தின் தேவை 04 »

# மூன்று இனங்களுக்கும் இலங்கை உரித்தானது

## பர்தாவை கழற்றுங்கள், சாரி அணியுங்கள் என்று கூற எவருக்கும் உரிமை கிடையாது

### அநுர குமார திஸாநாயக்க

■ ஆதில் அலி சப்ரி

பார்தாவை கழற்றுங்கள், முந்தானியை கழற்றுங்கள், சாரி அணியுங்கள் என்று நாட்டில் யாரையும் கட்டாயப் படுத்த முடியாது. இலங்கை மூன்று இனங்களுக்கும் உரித்தான நாடு. சம உரிமையினூடாக மாத்திரமே நாட்டின் முன்னேற்றம் சாத்தியமாகும். நாம் அரசியலில் இருக்கும்வரை சிறுபான்மையினருக்கு எதிரான இனக் கலவரங்களுக்கு இடமளிக்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து நாட்டு

11 »»»»



# அதிசயிக்க வைக்கும் ட்ரம்பின் கார்



அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றுள்ள, செல்வந்தரான டொனால் ரம்ப். தனது சொந்த செலவில், தனது காரை வடிவமைத்துள்ளார். உலகிலேயே அதி பாதுகாப்பு கூடிய கார் இதுவாகதான் இருக்க முடியும். வெளியே பிரளயமே நடந்தாலும் உள்ளே இருப்பவர்கள் பாதிக்காத வகையில் இந்த கார் அமைக்கப்பட்டுள்ளது. சரி அப்படி என்ன வசதிகள் உண்டு என்று பார்க்கலாமா?

காரின் கண்ணாடிகள் சுமாட் 6 இஞ்சி தடிப்பனானவை.

மற்றும் எந்த ஒரு துப்பாக்கிக் குண்டும் அதனைத் துளைக்காது.

அதுபோக முழு காருமே

11 »»»»

## அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்

# 10 ஆண்டுகளுக்கு நீடிப்பா?

### உண்மையை வெளிப்படுத்துங்கள்

■ ஆதில் அலி சப்ரி

ஐக்கிய அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேலும் 10 வருடங்களுக்கு நீடிப்பது குறித்த உண்மையை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றும் நாட்டின் இறையாண்மையை பாதிக்கும் இதுபோன்ற ஒப்பந்தங்களை மேற்கொள்ள ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா

11 »»»»



## உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட

# 90 கட்சிகள் பதிவுக்கு விண்ணப்பம்

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக 90 புதிய அரசியல் கட்சிகள் பதிவுக்கு விண்ணப்பித்திருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

புதிய தேர்தல் கட்சிகளை பதிவு செய்வதற்கான

11 »»»»

# நிந்தவூரில் நடாத்தியது போன்று பாரிய கூட்டமொன்றினை நடாத்திக் காட்டுங்கள்

## ஹக்கீமுக்கு ஹசனலி சவால்



நிந்தவூரில் நாங்கள் நடாத்தியது போன்று பிரமாண்டமான பொதுக்கூட்டமொன்றை முடியுமானால் நடாத்திக் காட்டுங்கள் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு முன்னாள் பொதுச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி நேற்று சவால் விடுத்தார்.

வெள்ளியன்று நீங்கள் நடாத்திய கூட்டத்திற்கு

11 »»»»



# உள்ளூராட்சி சபைகளுக்கு மேலும் 2000 உறுப்பினர்கள்

### இறுதி அறிக்கை கிடைத்ததும் தேர்தல்

■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

புதிதாக உருவாக்கப்படவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையின் கீழ் மேலும் 2000 புதிய உறுப்பினர்கள் உள்வாங்கப்படுவர் என்று மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார். எல்லை நிர்ணயம் தொடர்பான இறுதி

11 »»»»



# ஹசனலியின் நிந்தவூர் கூட்டத்தில் மு.கா. உயர் பீட உறுப்பினர்கள்

தனக்கு கட்சி தலைமைத்துவம் இழைத்த அநீதி தொடர்பாக விளக்கமளிப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் எம்.ரி.ஹசன் அலி நிந்தவூரில் நடத்திய கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தலைவரும், உயர்பீட உறுப்பினருமான சட்டத்தரணி அன்ஸில், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தாஹிர், பொத்துவில் பிரதேச சபையின் உப தலைவர் தாஜுதீன் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்களான நஸார், முனாப் பாரூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# முஸ்லிம்களுடன் மஹிந்த இன்று சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - முஸ்லிம்கள் சந்திப்பு இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு-07 விஜேராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக்

11 »»»»

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் 1 வருடத்துக்கு இடம்பெறாது

## விஜித ஹேரத் எம்.பி.

■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

இன்னும் ஒரு வருடத்துக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திப்போடப்படும் என்று ஜே.வி.பி. எம்.பி விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் மேலும் இழுத்தடிக்கப்படுவது தொடர்பிலான தற்போதைய நிலைமை பற்றிக் கூறும் போதே அவர் இவ்வாறு கூறினார். இது பற்றி அவர் மேலும் கூறுகையில்;

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இனியும்

11 »»»»



## இலங்கைக்கெதிரான ஜெனீவா தீர்மானத்தை

# ட்ரம்ப் அரசு மூலம் இரத்து செய்வோம்



### ஹெல உறுமய அரசுக்கு வேண்டுகோள்

■ எம்.ஏ. முஹம்மட் உவைஸ்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தைப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிரான ஜெனீவா தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது இலங்கைக்குத் தேவையான வகையில் திருத்துவதற்கு வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைவிடுத்து அந்தத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் கோருவதை ஏற்க முடியாது. அது நாட்டுக்கு ஆபத்தானதாகும் என்று

11 »»»»

# திருமலை வளாகத்துக்குள் பிரவேசிக்க பதினாறு மாணவர்களுக்குத் தடை




கிழக்குப் பல்கலைக்கழகத்தில் திருகோணமலை வளாகத்தில் பதினாறு பட்டதாரி மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

திருமலை வளாகத்தின் பணியாளர்கள் சிலரை ஆறு மணி நேரமாக

11 »»»»

# கட்சியை தூய்மைப்படுத்தும் பணியில் என்னோடு இணைந்து கொள்ளுங்கள்

## மு.காவின் முன்னாள் செயலாளர் ஹஸன் அலி பகிரங்க அழைப்பு

(யு.கே.காலித்தீன்)

நான் பதவிகளின் பின்னால் திரிகின்றவன் அல்லன். பதவிகள் தேவை என்றால் இவர்களின் கோரிக்கைகள் அனைத்துக்கும் தலையாட்டியே பெற்றிருக்க முடியும். நான் கொள்கையின் அடிப்படையில் வாழ்பவன். எனக்கு பதவியும் வேண்டாம், பட்டமும் வேண்டாம், செயலாளர் பதவியும் வேண்டாம், தலைவர் பதவியும் வேண்டாம். மர்ஹூம் அஸ்ரபினால் தொடங்கிய கட்சி சரியான பாதையில் செல்ல வேண்டும். கட்சியை தூய்மைப்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளேன். இந்தப் போராட்டத்தில் இளைஞர்கள் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் எம்.ரி.ஹஸன் அலி நிந்தவூரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெருந் தொகையான மக்கள் மத்தியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இக்கூட்டம் தலைவருக்கு எதிரான கூட்டமல்ல. தலைவரை திருத்துவதற்கானதொரு கூட்டமாகும். இது கடந்த 32 வருடங்களாக நான் கட்டிக் காத்த கட்சியாகும். இந்தக் கட்சிக்காக நான் செய்த தியாகங்களை மறந்து என்னைத் தூக்கி எறிவதற்கு முடிவு செய்தவர்களுக்கு ஆயிரத்தில் ஒரு சதவீத தகுதியும் கிடையாது. அவர்கள் நான் கதறக் கதற கண்ணீருடன் என்னை துரத்தினார்கள். இந்தக் கட்சிக்காக நான் செய்த தியாகத்திற்கு இவர்கள் தந்த பரிசு இது. எதற்காக எனக்கு இவ்வாறு செய்தார்கள் என்பதற்கான காரணத்தை அவர்களினால் சொல்ல முடியாது. அப்படிச் சொல்வார்களாயின் பச்சைப் பொய்யான காரணங்களையே சொல்வார்கள்.

இக்கட்சியின் நடவடிக்கைகளில் தலைவரை ஒரு மூக்கணாங் கயிறு கொண்டு இழுத்து வந்தேன். அதனால்தான் இன்று என்னை வெளியில் போட்டுள்ளார்கள். இன்னும் இரண்டு வருடங்களில் இந்த கட்சி ஆரம்பித்தன் நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான சூழல் நாட்டில் ஏற்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் தன்னை யாரும் மூக்கணாங் கயிறு கொண்டு இழுக்கக் கூடாதென்பதற்காகவே என்னை திட்டமிட்டு வெளியே போட்டுள்ளார்கள்.

18 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு தலைவரின் வீட்டிலொரு கூட்டம் நடந்தது. இதில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். இந்த சட்ட மூலம் சிறுபான்மையினருக்கு எதிரானது. ஆதலால், சிறுபான்மைக் கட்சியினரான நாங்கள் இதற்கு ஆதரவு வழங்கக் கூடாதென்று மன்றாடினேன். இதற்கு அங்கிருந்தவர்கள் என்னைப்பார்த்து நீங்கள் வராவிட்டால் இருங்கள். இதற்கு ஆதரவு அளிக்காது போனால் எங்களுக்கு ஆபத்து என்றார்கள். இதன் போது நிஸாம் காரியப்பர் இதற்கு ஆதரவு அளிப்பதற்காக கரையோர மாவட்டத்தைக் கேட்போம் என்றார். அப்போது (ஒரு திசையை சுட்டிக் காட்டி)



இந்தப் பாராளுமன்ற உறுப்பினர் கரையோர மாவட்டமும் மசிரும் என்றார். அவர்கள் பிரதி அமைச்சர் பதவியை பெறுவதற்கு தயாராகிவிட்டார்கள். தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27 ஆவது பேராளர் மாநாட்டில் கரையோர மாவட்ட தீர்மானம் நீக்கப்பட்டிருக்கின்றது.

மறு நாள் தலைவர் என்னைத் தொலைபேசியில் அழைத்து நீங்கள் எத்தனை மணிக்கு 18வது திருத்தச் சட்டத்திற்கு வாக்களிக்க வருவீர்கள் என்று கேட்டார். நான் அந்த பாவத்தை செய்ய மாட்டேன். என்னால் வர முடியாதென்று கூறினேன். குரல் தளுதளுக்கச் சொன்னார். அல்லாஹ்வுக்காக நீங்கள் வர வேண்டும். முழுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பதாக நான் வாக்குக் கூறிவிட்டேன். என்னை நீங்கள் காப்பாற்ற வேண்டுமென்று மன்றாடினார். இந்த பாவத்தைச் செய்தமைக்கு நீங்கள் மறுமையில் எனக்கு பதில் சொல்லியாக வேண்டுமென்று சொல்லி விட்டு வாக்களிப்பதற்கு சென்றேன்.

கடந்த காலத்தில் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி சொல்லுவதனை நிறைவேற்றுகின்றவர்களாகவும், அவரது கட்சியின் ஓர் அங்கமாகவுமே செயற்பட்டார்கள். தலைவர் அஸ்ரபின் தென்கிழக்கு அலகு, கரையோர மாவட்ட கனவுகளை மறந்தவர்களாக இருந்தார்கள். எந்த விடயமாக இருந்தாலும் கடைசி வரைக்கும் காலத்தை இழுத்துக் கொண்டு செல்வார்கள். பின்னர் தலைவர் முடிவு எடுப்பார் என்று தீர்மானிப்பார்கள். கட்சியை சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 03 நாட்கள் தலைமறைவாக இருந்தேன். பின்னர் 04 பக்கங்களைக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஆவணமொன்றினை தலைவரிடம் கையளித்தேன். அதனை ஒரு பக்கமாக சுருக்கி அதில் என்னை ஒப்பமிடுமாறு சொன்னார்கள். இதில் என்னால் ஒப்பமிட முடியாது. இக்கட்சியை நாங்கள் தொடங்கியது முஸ்லிம் சமூகத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக. வடக்கு, கிழக்கு மண்ணை வைத்துத்தான் இந்நாட்டு முஸ்லிம்களின் தன்மானத்தையும், தனித்துவத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே இக்கட்சியை தொடங்கினோம் என்றேன். இதில் கட்டாயம் ஒப்பமிட வேண்டுமென்றால் வேறொரு செயலாளரை நியமித்து அவரைக் கொண்டு ஒப்பமிடச் செய்யுங்கள் என்றேன்.

இதே போன்றுதான் முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டார நாயக்காவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது அந்த நம்பிக்கையில்லா பிரேரணையின் மீது முஸ்லிம் காங்கிரஸின் 03 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட வேண்டுமென்று மஹிந்த கட்டளையிட்டார். அதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களை தேடிக் கொண்டிருந்தார். ஏற்கனவே, இரண்டு பேரை அனுப்பி ஒப்பமிடச் செய்துவிட்டார். சிறுபான்மையினருக்கு ஆதரவாக திவிநெகும சட்ட மூலத்திற்கு ஆதரவாக அவர் தீர்ப்புக் கூறியதற்காக அவரை வெளியில் போடுவதற்கு ஜனாதிபதி எண்ணுகின்றார். சிறுபான்மையினருக்கு அதிகாரங்கள் வேண்டுமென்று கூறுகின்ற கட்சி எப்படி அவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையின் மீது ஒப்பமிட முடியும் என்று கேட்டேன். நான் வாக்களிக்க வர மாட்டேன். நீங்களும் ஆதரவாக வாக்களிக்கக் கூடாதென்று சொன்னேன். நானும் வாக்களிக்க மாட்டேன் என எனக்கு வாக்குத் தந்தார். மறுநாள் அவர் வாக்களித்தார். ஏன் நீங்கள் வாக்களித்தீர்கள் என்று கேட்டேன். நான் அறையில் இருந்தேன். தினேஸ் குணவர்த்தன என்னை இழுத்துக் கொண்டு போய் வாக்களிக்கச் செய்தார் என்றார். இவர் சின்னப் பிள்ளையா? மற்றவர்கள் இழுத்துக் கொண்டு போய் வாக்களிக்கச் செய்வதற்கு? மர்ஹூம் அஸ்ரபின் காலடியில் பயணிக்க வேண்டிய தலைவர் என்னை இழுத்துக் கொண்டு போனதாக சொல்லுகின்றார். எல்லாமே மந்திரி பதவியை பெறுவதற்கும், அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவுமேயாகும். கசினோ சட்ட மூலம் பாராளுமன்றத்தில் வந்த போது எதிர்த்து வாக்களிக்க வேண்டிய முஸ்லிம் காங்கிரஸ் வெளி நடப்புச் செய்தது.

நான் கொள்கைக்காகத்தான் பிரச்சினைப்பட்டேன். நான் கட்சியின் கொள்கை கோட்பாடுகள் முழுவதனையும் புரிந்து கொண்டவன். தலைவர் அஸ்ரபுக்கு பக்கத்தில் இருந்து அவரின் பேச்சுக்கள், கருத்துக்கள் அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டவன். நமது சமூகத்தில் உள்ள இளைஞர்களுக்கு தலைவர் அஸ்ரபின் கொள்கைளை கொடுக்க வேண்டுமென்பதற்காக என்னை ஈர்த்த அஸ்ரப் எனும் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கின்றேன்.

கட்சியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய என்னைப் போன்ற அனைவரையும் இப்போது புறக்கணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் நடைபெற்ற பேராளர் மாநாட்டு மேடையின் பின்னணியில் தலைவர் அஸ்ரப்பின் படம் கூட இருக்கவில்லை.

எனக்கும், தலைவருக்குமிடையிலான பிரச்சினை ஜனாதிபதித் தேர்தலில் உச்சக் கட்டத்தை அடைந்தது. மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். மைத்திரிக்குத்தான் ஆதரவு அளிக்க வேண்டுமென்று நான் சொன்னேன். அப்போது அவர் நீங்கள் கட்சியின் செயலாளர் பொறுப்புடன் பேச வேண்டுமென்று என் மீது சீறிப் பாய்ந்தார். மைத்திரிக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று நான் முடிவெடுக்கவில்லை. முஸ்லிம் சமூகம் எடுத்த முடிவு என்றேன். மஹிந்த வெற்றி பெற்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அவர் வெற்றி பெற்றால் அவரின் வெற்றியில் எனக்கு பங்களிப்பு இல்லையென்ற சந்தோசத்தில் என் வாழ் நாளை கழிப்பேன் என்றேன். இந்த முடிவு யாரும் சொல்லி எடுக்கவில்லை. பள்ளிவாசல்களில் 06 மாதங்களாக குனூத் ஓதினார்கள். அதன் பலன்தான் இந்த முடிவாகும்.

ஜனாதிபதித் தேர்தலின் போது மஹிந்த கரையோர மாவட்டத்தை தனக்குரிய அதிகாரத்தைக் கொண்டு தருவதாக சொல்லியுள்ளார். அதற்கான கடிதத்தையும் தருவதாகச் சொல்லியுள்ளார் என்று என்னையும் அழைத்துக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு போனார்கள். அங்கு என்னோடு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உங்களின் தேவை என்னவென்று மஹிந்த கேட்டார். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சொன்னார் எனக்கு கொந்தராத்து செய்வதற்கு 02 கோடி ரூபா பணம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டார். மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர் தான் செய்த வேலைகளுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை என்றார். இவ்வாறு ஒவ்வொருவரும் தங்களின் தேவைகளைக் கேட்டுக் கொண்டார்கள். அவற்றுக்கு உடனடியாக பணம் வழங்கப்பட்டது. என்னைப் பார்த்து இவரென்ன பேசாதிருக்கின்றார் என்று தலைவர் ரவூப் ஹக்கீமிடம் மஹிந்த கேட்டார். அதற்கு அவரின் பிரச்சினை கரையோர மாவட்டமென்று சொன்னார். கரையோர மாவட்டம் என்னுடைய பிரச்சினையா என்று கேட்கின்றேன். முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையைத்தான் நான் கேட்டேன். அப்போது கடிதம் தருவதாகச் சொன்னீர்கள் இதுதான் கடிதமா என்று கேட்டேன். கடிதத்தில் சிறு தவறு நடந்துவிட்டது என்றெல்லாம் பலவற்றைச் சொன்னார்கள். அவர்களின் நிலைப்பாடு இதுதான் என்பதனை புரிந்து கொள்ளுங்கள். பின்னர் ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் மைத்திரிக்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் 62 ஆயிரம் ஏக்கர் காணி பறிபோய் உள்ளது. இதனைப் பற்றி இவர்கள் கதைப்பதில்லை. முஸ்லிம்களின் உரிமைகளைக் கேட்க விடமாட்டார்கள். இது பற்றி பேசுவது நான் செய்த குற்றமா என்று கேட்கின்றேன்.

நவநீதம் பிள்ளையிடம் முஸ்லிம்களின் பிரச்சினைகளைக் கொண்டு ஆவணத்தை தயாரித்தது நான் செய்த குற்றமா என்று கேட்கின்றேன். கட்சியின் கொள்கைளை தெரியாதவர்கள் கட்சியை திசை மாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். நான் செய்த குற்றமென்ன என்று சொல்லுங்கள்.

நான் பதவிகளின் பின்னால் திரிக்கின்றவன் அல்லன். பதவிகள் தேவை என்றால் இவர்களின் அனைத்துக்கும் தலையாட்டியிருந்தால் பெற்றிருக்க முடியும். கொள்கையின் அடிப்படையில் வாழ்பவன். எனக்கு பதவியும் வேண்டாம், பட்டமும் வேண்டாம், செயலாளர் பதவியும் வேண்டாம், தலைவர் பதவியும் வேண்டாம். மர்ஹூம் அஸ்ரபினால் தொடங்கிய கட்சி சரியான பாதையில் செல்ல வேண்டும். கட்சியை தூய்மைப்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளேன். இந்தப் போராட்டத்தில் இளைஞர்கள் மாத்திரமன்றி எல்லோரும் இணைந்து கொள்ளுங்கள் என்று அழைக்கின்றேன். தலைவரை மாற்ற வேண்டுமென்று நான் கூறவில்லை. அவர் திருந்த வேண்டுமென்று கூறுகின்றேன் என்றார்.

இதன் போது கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் பலர் ரவூப் ஹக்கீம் தலைவராக இருக்க முடியாது. அவரை மாற்ற வேண்டுமென்று கோசமிட்டமை குறிப்பிடத்தக்கது.

# தனி மனித இலக்குகளை அடைவதற்கான சித்து விளையாட்டுக்களை அனுமதிக்கமுடியாது

## நிந்தவூரில் அமைச்சர் ஹக்கீம்





(பிறவ்ஸ் முஹம்மட்)

ஹஸன் அலி இப்போது மனவேதனையுடன் இருக்கிறார். அவர்? கூட்டம் நடத்துவதை நாங்கள் ஆமோதிக்கிறோம். ஆனால், ஒரு தனிமனிதனின் வேதனையை பகைடைக்காயாக வைத்து தனிப்பட்ட இலக்குகளை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் சித்து விளையாட்டுகளை அனுமதிக்க முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிந்தவூர் கிளையின் கூட்டமும், நிந்தவூர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஜப்பார் அலி தலைமையில் கடந்த சனிக்கிழமை (04) இரவு நிந்தவூர் பிரதேச சபையின் கேட்போர் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது;

கடந்த மாகாணசபைத் தேர்தலில் திடீரென செயார்மன் (தவிசாளர்) சங்கம் என்றொரு குழுமம் உருவாகியது. இந்த சங்கம் உருவானதன் பின்னால் ஒரு வரலாறு இருக்கிறது. இந்த சங்கம் படுத்திய பாடு பொல்லாத பாடு. சில வாக்குறுதிகளை தந்து, அவற்றை நிறைவேற்றக்கூடாது என்று சொன்னவர்கள்தான், இப்போது அதில் படமெடுத்து ஆடுகிறார்கள்.

நான் பிரம்பு எடுக்கப்போனால் கட்சியில் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இப்போது அவர்கள் எனக்கே பிரம்பு எடுத்திருக்கிறார்கள். இந்த விவகாரம் மிகப்பெரிய அசிங்கமாக மாற்றுத் தரப்பிலிருந்து உந்துசக்தியுடன் பார்க்கப்படுகிறது. கூட்டத்துக்கு முன்னால் நின்றுகொண்டு கூப்பாடு போட்டவர்கள் முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் அல்ல. அவர்களுடைய உள்ளூர் தலைமைகளை ஆட்சிக் கதிரையில் அமர்த்தவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள். இவர்கள் சிறியதொரு வட்டத்தை போட்டுக்கொண்டு அதுதான் கட்சி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திடீரென கட்சியை தூய்மைப்படுத்தபோகிறோம் என்று அபாண்டங்களை, அவதூறுகளையும் சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது. இது வண்டியின் பின்னால் சென்ற பிராணியின் கதைக்கு ஒப்பானது. கட்சிக்குள் இருந்துகொண்டு இவ்வாறான வேலைகளில் ஈடுபடுபவர்கள் இன்னும் இன்னும் கூட்டம் வைத்துப் பாருங்கள். கூட்டம் வைக்க, வைக்க அனுபவிப்பார்கள். இவர்கள் மிக தைரியமாக, தாராளமாக கூட்டங்களை வைக்குமாறு நான் கூறுகிறேன்.

கட்டாய உச்சபீடக் கூட்டத்தில் என்னை தலைவராக பிரேரித்தவர் ஹஸன் அலி. அவருடைய கூட்டத்தில் வைத்தும் அதை மீண்டும் ஆமோதித்துவிட்டு சென்றிருக்கிறார். அப்படியான ஒருவரை நான் இழிவுபடுத்த முடியாது. ஒரு தனிமனிதனுடைய வேதனையை இன்று கொஞ்சப்பேர் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

கரையோர மாவட்டத்தை மறந்துவிட்டோம் என்று மிகப்பெரியதொரு அபாண்டத்தை

சொல்லவருகிறார்கள். நேர்மையான அரசியல் செய்துகொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் நெருக்கமானதொரு சிநேகத்தை பேணிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், அதனை லாவகமாக பெற்றெடுப்பதற்காக வியூகங்களை வகுத்துக்கொண்டிருந்தோம்.

அறிக்கை மன்னர்களாக இருந்துகொண்டு நாங்கள் எதையும் சாதிக்கவில்லை. நிந்தவூரிலுள்ள கிரான்கோமாரி காணிப் பிரச்சினைக்கு அறிக்கை விட்டு ஓர் ஏக்கர் காணியை யாராவது மீட்கமுடியுமா? ஆனால், எவ்வித அறிக்கைகளையும் விடமால் கிரான்கோமாரி பிரச்சினைக்கு இந்த தலைமை நிச்சயமாக முடிவினை பெற்றுத்தரும்.

ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் என்பது ஒருத்தரையும் கடைசிவரை கட்சியில் இருக்கவிடாது. முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தேசியப்பட்டியல் வழங்கி 13 பேரை நாங்கள் அலங்கரித்தோம். ஆனால், இப்போதும் அஸ்லமை தவிர, மற்ற எல்லோரும் தேசியப்பட்டியலை அனுபவித்துட்டு கிட்டத்தட்ட போய்விட்டார்கள். தேசியப்பட்டியல் வழங்கி இரண்டு, மூன்று மாதங்கள் செல்வதற்கு இடையில் அது பிரச்சினையில்தான் போய் முடிகிறது.நான் கஃபத்துல்லாவுக்கு சென்று அல்லாஹ்விடம் துஆ கேட்டால், ஒன்றை மட்டும்தான் கேட்பேன். இந்த தேசியப்பட்டியலை மட்டும் இல்லாமல் செய்துவிடு என்றுதான் கேட்பேன். அப்போதுதான் இந்தக் கட்சியை காப்பாற்றமுடியும். ஆனால், சகோதரர் ஹஸன் அலிக்கு தேசியப்பட்டியல் வழங்கி அலங்கரிப்பதனால் எனக்கு எந்தவொரு பிரச்சினையும் கிடையாது. ஆனால், இந்த விவகாரத்தில் தலைவர் ஏன் தயக்கம் காட்டினார். என்பதில் அவர் தெளிவுபெற வேண்டும். தலைவர் கொடுத்த வாக்குறுதியின் பெறுமானம், என்னை சொல்லவைத்தாலும் அதை செய்வேன்.

கறுப்பு ஆடுகளை நான் கண்டுகொள்ளவில்லை என்று யாரும் நினைக்கவேண்டாம். அந்த கறுப்பு ஆடுகள் எங்கு மேய்கிறது என்று எனக்குத் தெரியும். இப்படியான கூட்டத்தினரை நான் நெடுங்கயிற்றில் விட்டிருக்கிறேன். ஆனாலும், நான் நிதானத்துடன் இருக்கிறேன்.

இந்நிகழ்வில் சுகாதார, ஊட்டச்சத்து மற்றும் சுதேச மருத்துவத்துறை பிரதி அமைச்சர் பைசால் காசீம், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். மன்சூர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், மாகாணசபை உறுப்பினர்களான ஏ.எல். தவம், ஆரிப் சம்சுதீன், ஐ.எல்.எம். மாஹிர், உயர்பீட உறுப்பினர்களான பளீல் பி.ஏ, ஏ.சி. யஹியாகான் மற்றும் நிந்தவூர் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை பொறுப்பாளர் உள்ளிட்ட ஊர் மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# நாட்டில் மனித நேயம் குறைந்து ஆபத்தானதொரு சமூக நிலை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா



மனித நேயம் இல்லாது போய் நாட்டில் மிகவும் ஆபத்தான சமூக நிலைமை உருவாகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ - ஹெரகொல்ல ஒச்சட்வத்தை முஸ்லிம் வித்தியாலத்தின் 25 ஆவது ஆண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். பணத்திற்கு மாத்திரமல்ல பணத்தை பெற்றுக்கொண்டு எவற்றையும் காட்டிக்கொடுக்க தயாராக இருக்கும் சிலர் நாட்டில் இருக்கின்றனர். குறிப்பாக அரசியல்வாதிகள் தமது தாயை கூட தட்டில் வைத்து விற்பனை செய்ய தயாராக இருக்கும் காலம் ஏற்பட்டுள்ளது. நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கல்விக்கு விசேடமான இடத்தை வழங்கினேன்.

கல்வியமைச்சருடன் பல மணிநேரம், பல வாரங்கள் கலந்துரையாடி கல்வி மறுசீரமைப்பை ஆரம்பித்து நாட்டிற்குள் கல்வியில் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்த முடிந்தது.நவோதய திட்டத்தின் கீழ் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா இரண்டு பாடசாலைகள் என்ற கணக்கில் 700 பாடசாலைகளை தெரிவு செய்து கல்வி வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. வடக்கு, கிழக்கில் யுத்தம் நடைபெற்றதன் காரணமாக அங்குள்ள பாடசாலைகளில் அதனை மேற்கொள்ள முடியாது போனது.

நாங்கள் ஆட்சிக்கு வரும் போது பாடசாலைகளில் அதிபர்கள் இருக்கவில்லை. பெரும்பாலானவர்கள் கொழும்புக்கு செல்ல தயாராக இருந்தனர். கஷ்டமான தூர பிரதேசங்களுக்கு சென்று பணியாற்றிய அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இவ்வாறு பாடசாலைகளை முன்னேற்றி கொண்டு செல்லும் போது அரசாங்கம் மாறியது. தற்போது முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டியுள்ளது. தற்போது நாங்கள் கல்வி அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்துள்ளோம் என முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

# ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு பதிலாக நேரடியாக என்னோடு பேசலாம்

## யாழில் ஜனாதிபதி அழைப்பு



ஆர்ப்பாட்டம் செய்வது தவறில்லை. அதனைவிட பிரச்சினையை கலந்தாலோசித்து தீர்ப்பது சிறப்பானதாக இருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எம்மை பிரிப்பதற்கு வடக்கிலும் தெற்கிலும் நாட்டுக்கு வெளியிலும் பல செயற்படுகின்றனர். நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பிரிந்து செயற்பட கூடாது. நாம் எப்போதும் ஒன்றாக கைகோர்த்து இருக்க வேண்டும். இதன் மூலமே ஒருவருடைய பிரச்சினையை மற்றையவர் அறிந்து கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ''ஜனாதிபதிக்கு தெரிவியுங்கள்'' எனும் மக்கள் குறைகேள் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்தில் இன்று புதிய ஒரு திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்த ''ஜனாதிபதிக்கு தெரிவியுங்கள்'' எனும் மக்கள் குறைகேள் நிலையத்தின் மூலம் யாழ் மக்களுக்கும் எனக்கும் இடையிலான தொடர்பு வலுப்பெறபோகின்றது.

நாம் எந்த சந்தர்ப்பத்திலும் பிரிந்து செயற்பட கூடாது. நாம் எப்போதும் ஒன்றாக கைகோர்த்து இருக்கவேண்டும். இதன் மூலமே ஒருவருடைய பிரச்சினையை மற்றையவர் அறிந்து கொள்ள முடியும். பிரிந்து செயற்பட்டால் பிரச்சினைகளை அறிந்து கொள்வது கடினமாக இருக்கும்.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள போதிலும், மக்கள் மத்தியில் உள்ள பிரச்சினைகள் தீரவில்லை. யுத்தம் முடிவடைந்துள்ள போதும் நாட்டு மக்கள் மனதளவில் வேறுபட்டு செயற்படுகின்றார்கள்.

இனம், மதம், மொழி, கட்சி அரசியல் பிரதேசவாதம் பார்த்து பழகக் கூடாது. எல்லோரும் மனதளவில் ஒன்றாக வாழ வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே அனைத்து மதங்களின் போதனைகளாக இருக்கின்றன. மதங்களின் தத்துவங்களை கவனத்தில் கொண்டு ஒற்றுமையாக வாழ வேண்டும். இப்போது வேலையில்லா பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் செய்வதாக கேள்விப்பட்டேன். பட்டதாரிகள் அனைவருக்கும் அரசாங்க வேலை வழங்குவது என்பது சாத்தியமற்றது. தனியார் துறையில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புக்கள் உள்ளன. அதில் பட்டதாரிகளுக்கு ஏற்ற தொழில்களும் உள்ளன.

வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யாமல் இன்று வந்து என்னோடு கதைத்திருந்தால் இன்றே 10 பேருக்கு வேலை வாய்ப்பை பெற்று கொடுத்திருப்பேன். இந்த புதிய அலுவலகத்திலோ அல்லது எனது அலுவலகத்திலோ வேலை பெற்றுக் கொடுத்திருக்க முடியும். என்னை சந்திப்பது கடினமான விடயம் இல்லை. என்னையும் எந்த நேரத்திலும் சந்திக்கலாம். எனது வீட்டு கதவு எப்போதும் திறந்து இருக்கும். நான் இனி மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது யாழுக்கு விஜயம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளேன். இதன் மூலம் உங்களுக்கும் எனக்கும் உள்ள நெருக்கம் அதிகரிக்கும். இதன்போது, அமைச்சர் மகிந்த சமரசிங்க, துமிந்த திசாநாயக்க, வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எம். சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், மாவை சேனாதிராஜா, அங்கஜன் ராமநாதன் ஆகியோரும் பிரதேச அரசியல் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் பங்குபற்றினர்.

## பல குற்றச்சாட்டுக்களுடன் சம்பந்தப்பட்ட நபர் கைது

கொலை, கொள்ளை மற்றும் போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக சந்தேகப்படும் நிசாந்த சமன் குமார என அழைக்கப்படும் கனங்கே குமார என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அம்பலாங்கொடை பொலிஸாரே குறித்த நபரை கைதுசெய்துள்ளனர். கடந்த 2015.12.12 ஆம் திகதி மிட்டியாகொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நபர் ஒருவரை துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புபட்ட விசாரணைகளுக்கு மத்தியிலேயே குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களை பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்திருந்தது.

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 2010 ஆம் ஆண்டளவில் அம்பலாங்கொடை தனியார் வங்கியொன்றில் துப்பாக்கியை காட்டி மிரட்டி 8,80,000 ரூபா கொள்ளையடித்தமை, அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் துப்பாக்கியை காட்டி 1,43,000 ரூபா பெறுமதியான மோட்டார் வண்டியை கொள்ளையடித்தமை, அம்பலங்கொடை கோவிலவத்தை பிரதேசத்தில் ஆலையொன்றில் துப்பாக்கியை 2650 ரூபா பணத்தை கொள்ளையடித்தமை, ஹோமாகமை பிரதேசத்திலுள்ள இறைச்சிகடையொன்றில் புகுந்து பணம் கொள்ளையடித்தமை, தெஹிவளை பிரதேசத்திலும் கொட்டாவை பிரதேசத்தில் பணம், மோட்டார் வண்டி கொள்ளையடித்தமை, உள்ளிட்ட பல குற்றசாட்டுக்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நவமணி வாசகர் வட்டம் அங்குரார்ப்பணம்



நவமணி பத்திரிகையின் அம்பாறை மாவட்ட வாசகர் வட்ட அங்குரார்ப்பண நிகழ்வு சம்மாந்துறை அல்.மர்ஜான் மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது அம்பாறை மாவட்ட வாசகர் வட்டத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான ஏ.எல்.எம்.யாசின் தலைமையிலான மாவட்ட வாசகர் வட்ட உறுப்பினர்கள் குழுவாக நிற்பதை காணலாம். (படம்-அஹமட் ஸிறாஜ் இஸ்ஸதீன்)

## முச்சக்கரவண்டிகளுக்கு நிலையான மீற்றர்

முச்சக்கர வண்டிகளுக்காக நிலையான மீற்றர் ஒன்றை இலவசமாக பெற்றுகொடுக்க வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்தது.

முச்சக்கரவண்டிகளுக்கு பொருத்தப்பட்டுள்ள மீற்றர் தொடர்பில் நாளாந்தம் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுவருவதாகவும், குறித்த மீற்றரில் காட்டப்படும் பண கணக்காணது ஒவ்வொரு முச்சக்கரவண்டிகளுக்கு வேறுபட்டு காணப்படுவதாக முறையிடப்பட்டுள்ளதாகவும் அச்சங்கம் தெரிவித்தது.

அதனால், அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் இலவசமாக நிலையான மீற்றரொன்று பெற்று கொடுப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதே வேளை, பொதுமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளதோடு, பொதுமக்களின் உரிமைகள் இல்லாமல் போகும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குவதாகவும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை குறிப்பிட்டது.

## அதிபர்களுக்கு இராணுவப்பயிற்சி

இவ்வரசில் அதிபர்களுக்கு இராணுவப்பயிற்சி பெற்றுகொடுக்கவுள்ளதாகவும், அதனடிப்படையில் தென் மாகாண பாடசாலைகளில் உள்ள அதிபர்களுக்கு எதிர்வரும் 22 ஆம் திகதியிலிருந்து குறித்த இராணுவப் பயிற்சி பெற்றுகொடுக்கவுள்ளதாக ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கம் தெரிவித்தது.

கடந்த அரசில் குறித்த இராணுவப் பயிற்சிக்கு கடும் எதிர்ப்பினை ஐ.தே. கட்சி தெரிவித்திருந்ததோடு, ஆனாலும், இவ்வரசில் இந்த பயிற்சிக்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியது.

## இருவேறு விபத்துக்களில் நால்வர் பலி

கடற்படை கார் ஒன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 12 வயது மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று அதிகாலை கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதில், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தாய் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மதவாச்சியை சேர்ந்த சஷிக பியுமால் என்ற மாணவனே உயிரிழந்துள்ளதாகவும், விபத்தில் படுகாயமடைந்த குறித்த மாணவனை பிரதேச வைத்தியசாலையிலிருந்து அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்ற முற்பட்ட போதே அவர் உயிரிழந்துள்ளார்.

கடற்படை காரானது முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல எத்தனித்த போதே குறித்த விபத்து நேர்ந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, ருவன்வெல்ல - அமித்திரிகல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் 3 பேர் பலியாகியுள்ளனர்.

சிவனொளிபாத யாத்திரைக்கு சென்று திரும்பிய வேன் ஒன்றும், பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டமையாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த வேனின் சாரதி உட்பட வேனில் பயணித்த இருவரும் விபத்தில் பலியாகியுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மகாநாயக்க தேரரின் சுகம் விசாரித்த முஸ்லிம்கள்



அண்மையில் வாகன விபத்தொன்றில் சிக்கி மயிரிழையில் உயிர் தப்பிய சப்ரகமுவ பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் கம்புரு கமுவ வஜிர நாயக்க தேரரை முஸ்லிம் தூதுக்குழு ஒன்று களனி பிரிவெனாவிலுள்ள அவரது விஹாரைக்குச் சென்று சுகம் விசாரித்தது. முஸ்லிம் இயக்கங்களின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சிலின் ஏற்பாட்டில் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. 86 வயதினையுடைய மகாநாயக்க தேரர் பயணித்த வாகனம் கடுகன்னாவில் நூறு அடிக்குக் கீழ் விழுந்த போதும் தேரர் எவ்வித காயமுமின்றி தப்பியுள்ளார். நாட்டில் நல்லிணக்கத்துக்காக உழைக்கும் எனக்கு இறைவன் மேலும் நாட்டுக்காக உழைக்கும் வாய்ப்பினை தந்துள்ளார் என பேராசிரியர் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

## பொலிஸ் சான்றிதழை இணையத்தில் பெறலாம்

எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் பொலிஸ் சான்றிதழ் அறிக்கையினை பொலிஸ் இணையத்தளத்தின் ஊடாக பெற்றுகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய முறைமைக்கு அமைய இணையத்தளத்துடன் இணைந்துள்ள நிலையில் துரிதகதியில் அறிக்கையினை பெற முடியும்.

தகவல் பரிவர்த்தனை தொழில்நுட்ப முகவர் மற்றும் பொலிஸ் தகவல் தொழில் நுட்ப பிரிவு என்பன இணைந்து இந்த இணையத்தளத்தினை ஸ்தாபித்துள்ளது.

பொதுமக்கள் www.police.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக தமது கணனி அல்லது கையடக்க தொலைபேசியின் ஊடாக பொலிஸ் அறிக்கை விண்ணப்பத்தினை சமர்ப்பித்து பெற முடியும் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த புதிய இணையத்தளம் நாளைய தினம் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.



திருகோணமலை மாவட்டத்திலுள்ள வேலையில்லா பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கக் கோரி கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று வரை நான்கு நாட்களாக சத்தியாக் கிரக போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகவே சத்தியாக்கிரகப் போராட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் ஈடுபட்டுள்ளதை படத்தில் காணலாம். (படம்-சஹ்ரின் எம் இஸ்மத்)

## கிண்ணியாவில் டெங்கு பாதிப்புற்றோருக்கு பறகஹதெனிய தாருத் தௌஹீத் உதவி



(இக்பால் அலி)

கிண்ணியாப் பிரதேசத்தில் சமீபகாலமாக டெங்கு நோய் அதிகரித்துள்ளதால் 500 க்கும் மேற்பட்ட வெளிநோயாளர்கள் சிகிச்சைக்காக வந்ததுடன், வைத்தியசாலையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநோயாளர்கள் வருகை தருகின்றார்கள். எனவே, இவர்களுக்கான வளங்கள் போதாமையுள்ளதாக கிண்ணியா வைத்தியசாலையின் பிரதான மாவட்ட வைத்திய அதிகாரி கிண்ணிய தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எம். எச. எம். சமீம் தெரிவித்தார்.

கிண்ணியாப் பிரதேசத்தில் நிலவும் டெங்கு நோய் காரணமாக கிண்ணியா தள வைத்திய சாலையின் வேண்டுகோளின் பிரகாரம் பறகஹதெனிய ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவினால் மெட்ரஸ்கள், நுளம்பு வலைகள், பெட்சீட்கள், கதிரைகள், மின்விசிறிகள், மற்றும் ஏனைய பொருட்கள் கையளித்து வைக்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போதே வைத்திய அதிகாரி எம். எச. எம். சமீம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் பொதுத் தலைவர் அஷ்ஷெய்க் என். பீ. எம். அபூபக்கர் சித்தீக் மதனி இந்த உதவிப் பொருட்களை வழங்கிவைத்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்

மாகாண அமைச்சு, மத்திய அமைச்சும் அவர்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகின்றன. அதேவேளை மக்களின் பங்களிப்பு என்றவகையில் இன்று மட்டும் 120 டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வாட்டிலும் 16 -20 கட்டில்கள் உள்ளன. எனினும் ஒவ்வொரு வாட்டிலும் 50 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இருப்பதன் காரணமாக எல்லோருக்கும் கட்டில்கள் போதாமைகள் உள்ளன.

மெத்தைகள் நுளம்புவலைகள், கதிரைகள் உங்களால் வழங்கப்பட்டமையினால் எங்களுக்கு சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தாலும் அவசரத் தேவைக்கு இலங்கையிலுள்ள பறகஹதெனிய ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா அமைப்பினர் எமது தேவையை உடன் நிறைவு செய்தமைக்கு எமது மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நிகழ்வில் ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் உத்தியோகஸ்தர்களான அஷ்ஷெய்க் அம்ஜத் ராசிக் மற்றும் வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
06TH MARCH 2017 - MONDAY

# டெங்கு ஒழிப்பில் மக்களது பங்களிப்பு இன்றியமையாதது

இலங்கையின் பல பாகங்களிலும் டெங்கு நோய்த் தொற்று பரவிவருகின்றமை பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளதை நாம் அறிவோம்.

2016ஆம் ஆண்டு டெங்குத் தொற்றுக்கு இலக்கானோரின் எண்ணிக்கை 50ஆயிரத்தைத் தாண்டியிருந்ததோடு, அது 2015 ஆம் ஆண்டோடு ஒப்பிடும் போது இரு மடங்காக இருந்தது. அதே போன்று கடந்தாண்டு டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சுமார் 85 பேர் பலியாகினர்.

2017 புத்தாண்டு பிறந்து இரு வாரங்களில் 1200 டெங்கு நோயாளர்கள் இணங்காணப்பட்டதோடு, அத்தொகை மார்ச் மாதமாகின்றபோது 17 ஆயிரத்தை அடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு முழுவதும் பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 23ஆயிரமாக இருக்கும்போது, இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் 17ஆயிரமாக பதிவாகியுள்ளமை சுகாதாரத் துறையையே அச்சம்கொள்ளச் செய்துள்ளது.

கொழும்பு மற்றும் சூழவுள்ள பிரதேசங்களில் டெங்கு தொற்றுக்குள்ளான 5000க்கு மேற்பட்டோர் இணங்காணப்பட்டுள்ளதோடு, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பில் 510 பேரும், அம்பாறையில் 87 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், உப்புவெளி மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் 1400க்கு மேற்பட்டோரும் டெங்கு அறிகுறிகளுடன் இணங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கிண்ணியாவில் மாத்திரம் 400 பேரளவில் டெங்கு தொற்றுக்குள்ளாகியுள்ளதோடு, வார இறுதியாகும் போது 7 வயது சிறுமி, 19 வயது இளம் பெண் உட்பட 4 பேர் பரிதாபமாக பலியானமை டெங்கு குறித்த தேசிய அவதானத்தை ஈர்த்தது. பேருவலை சீனன் கோட்டையிலும் டெங்கு அச்சுறுத்தல் கூடுதலாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

டெங்கு, குழந்தைகள், சிறுவர்களில் கடுமையான நோய்த் தாக்கத்தை உண்டாக்கின்றது. ஆண்களைக் காட்டிலும் கூடுதலாக பெண்கள் பாதிப்படைகின்றனர். நீரிழிவு, ஆஸ்துமா நோய் போன்ற நீண்டகால நோய்கள் உள்ளவருக்கு இந்நோய் மிகவும் உக்கிரம் அடையும் போது உயிருக்கு தீங்குவிளைவிக்கக் கூடிய பாதிப்பை உண்டாக்கும்.

சட்டவிரோத காணி நிரப்பல், இயற்கை பொது வடிகால்கள் மூடப்பட்டு கட்டடம் கட்டல், திட்டமிடப்படாத கான் கட்டுமானம், சுற்றுச் சூழல் பற்றிய எவ்வித அக்கறையுமின்மை, குப்பைகள், நீர் தேங்கும் பொருட்களை சுற்றுச் சூழலில் எறிதல் போன்றனவே டெங்கு பரவுதலுக்கு ஏதுவாக அமைந்துவிடுகின்றன.

டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய வகையில் நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை சூழலுக்கு சேர்க்காது, தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்று போத்தல்கள், வெற்று டயர்கள், பொலிதீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்றி, வாரத்துக்கு ஒரு தடவையாவது சுற்றுப் புறச் சூழலை சுத்தப்படுத்தி உயிர்கொல்லி டெங்கு நோயை இல்லாதொழிக்க பொதுமக்கள் பங்களிப்புசெய்யவேண்டும்.

கிண்ணியாவில் டெங்குத் தொற்று அதிகரித்தபோது டெங்கு ஒழிப்பு பணிகளில் சுகாதார அதிகாரிகளுடன் இளைஞர்களும் தொண்டர்களாக ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்கியது பாராட்டத்தக்க விடயமாகும். சீனன் கோட்டையில் பள்ளிவாசல் சம்மேளனம் டெங்கு ஒழிப்பில் பங்களிப்பு செய்துவருகின்றது.

பாடசாலைகள், கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்ற இடங்களில் பிரசாரம், கருத்தரங்குகள், துண்டுப் பிரசுரங்கள் போன்ற முறைகளைப் பயன்படுத்தி டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, டெங்கு நோயின் விபரீதத்தை மக்களுக்கு தெரியப்படுத்தி, சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்படுதல் காலத்தின் தேவையாகும்.

டெங்கு ஒரு ஆட்கொல்லி நோயாகும். சட்டத்தாலோ, பொலிஸ், சுகாதார அதிகாரிகளாலோ, வைத்தியர்களினாலோ மாத்திரம் இதனை ஒழித்துவிட முடியாது. டெங்கு நோயை இல்லாதொழிப்பதில் பொதுமக்கள் பங்களிப்பும் இன்றியமையாத ஒன்றாகும். ஒவ்வொருவரும் தமது வீட்டையும் சூழலையும் சுத்தமாக வைத்திருப்பது குறித்து அக்கறையோடு செயற்பட்டால் இந்த கொடிய நோயிலிருந்து மீட்சி பெற முடியும்.

# முஸ்லிம் கூட்டமைப்பு காலத்தின் தேவை

**சத்தார் எம் ஜாவித்**









இலங்கை ஒரு பல்லின, பல் சமூகக் கட்டமைப்புக்களைக் கொண்டாலும் இனங்கள் என்ற அடிப்படையில் ஒவ்வொரு இனங்களுக்கிடையிலும் அரசியல் ரீதியான பிரச்சினைகளும், பிணக்குகளுமே மேலோங்கி அவை ஒவ்வொரு சமூகத்தினையும் பின்னடைவுகளுக்கு இட்டுச் செல்கின்ற நிலைமைகளையே அதிகம் காண முடிகின்றது.

இலங்கையின் தற்கால சூழ்நிலையில் சமூகங்களை கூறு போடும் நிலையில் அரசியல் என்ற விடயம் முன்னிலை வகிக்கின்றது. குறிப்பாக பெரும்பான்மை சமுகமாக இருந்தாலும் சரி, சிறுபான்மை தமிழ் சமூகமாக இருந்தாலும் சரி அல்லது முஸ்லிம் சமுகமாக இருந்தாலும் சரி இந்த ஒவ்வொரு இனங்களுக்குள்ளும் இருக்கின்ற அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் நாளாந்தம் ஏற்பட்ட வண்ணமேயுள்ளன.

இவ்வாறான நிலைமைகள் முஸ்லிம் சமூகத்திற்குள்ளும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் பூதாகரமாகி வருகின்றமையானது முஸ்லிம் மக்களை தற்போது கிலிகொள்ளச் செய்து வருகின்றது. இதற்கு முக்கிய காரணமாக இருக்கும் விடயம் முஸ்லிம் சமூகத்திற்குள் அதிகரித்து வரும் பல கட்சிப் போக்குகளேயாகும். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சிகளாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும், அகில இலங்கை மக்கள் காங்கிரசும் காணப்படுகின்றன. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்த அமைச்சர் றிஷாத் பதியுதீனால் உருவாக்கப்பட்ட ஒரு கட்சியாகும்.

இந்த இரு கட்சிகளும் அவ்வப்போது அரசியல் இருப்புக்களை தக்க வைத்துக் கொள்வதற்கு ஒருவரை ஒருவர் தமக்குள் உள்ள குறைகளை சுட்டிக்காட்டி விமர்சனங்கள் செய்து வருவதனால் வீணான பிரச்சினைகளே தோற்றம் பெற்று வருகின்றன. இதன் காரணமாக முஸ்லிம்களே அதிக பாதிப்புக்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபினால் இன நல்லிணக்கத்தினை நிலைநிறுத்த வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் சகல சமூகங்களையும் உள்ளடக்கியதான ஒரு கட்சியாக அவரால் உருவாக்கப்பட்டது. அந்தக் கட்சி மர்ஹூம் அஷ்ரப் இருக்கும் வரை முஸ்லிம் சமூகத்திற்கு உயிரூட்டிய ஒரு தனித்துவம் வாய்ந்த கட்சியாகவும், ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களுக்கு ஆட்சியமைப்பதற்கு தேவையானதுமான ஒரு பேரம் பேசும் கட்சியாகவுமே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் விளங்கியது என்றால் அது மிகையாகாது.

பலராலும் ஆதரவு வழங்கப்பட்டு குறுகிய காலத்தில் அதீத வளர்ச்சி கண்டதொரு சிறுபான்மைக் கட்சி என்றால் அது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசாகவே அக்காலத்தில் காணப்பட்டது. இவ்வாறு பல முன்னேற்றங்களைக் கண்டு முஸ்லிம் சமுகத்திற்கு அரசியல் அடையாளத்தை ஏற்படுத்திய கட்சியின் உயர்வான காலம் மர்ஹூம் அஷ்ரபின் அகால மரணத்தின் பின்னர் சின்னா பின்னமானது என்பதே உண்மையான விடயமாகும். அஷ்ரபின் மரணத்தின் பின்னர் அதன் தலைமைப் பொறுப்பை அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஏற்றுக் கொண்டு அதன் நடவடிக்கைகளை அஷ்ரபின் வழி காட்டல்களின் படி முன்னெடுத்துச் சென்றாலும் அது சிறிது காலமே நிலை பெற்றதே தவிர நிலையாக முன்னெடுக்க முடியாது போய்விட்டது.

இதற்குக் காரணம் உட்கட்சிப் பூசல்களும், பதவி மோகங்களுமே காரணங்களாகும். இதன் காரணமாக ஒருசிலர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிக் கொண்டு புதிய கட்சிகளை ஆரம்பித்துக் கொண்டனர். இந்த வகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் றிஷாத் பதியுதீன், பஷீர் சேகுதாவுத், அதாவுல்லா போன்றவர்கள் இன்று பிரிந்து தனித்தனியாக அரசியல் நடாத்தி வருகின்றதைக் காண முடிகின்றது. இவ்வாறான பிளவுகளால் முஸ்லிம் சமுகத்திற்கு நட்டமே தவிர எந்தவித இலாபங்களும் கிடைக்கப் போவதில்லை. இந்த நிலைமைகள் கட்சியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை குறைவடையச் செய்து பல மாவட்டங்களில் தக்க வைக்கப்பட்டிருந்த பாராளுமன்ற ஆசனங்களையும் கூட இழக்கவும் வழி வகுத்து விட்டன.

இவ்வாறு பின்னடைவை இக்கட்சிகள் எதிர் கொண்டதால் தற்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் வாக்குகள் சிதறுண்டது மட்டுமல்லாது இக்கட்சிகளுக்குள் பதவிப் பிரச்சினைகளையும் தோற்றுவித்தது அது தற்போதைய நிலையில் இக்கட்சிகளின் செல்வாக்குகளை பெரும்பான்மைக் கட்சிகளில் இருந்து தூரமாக்குவதற்கும் வழிகோலி வருவதுடன் பேரினவாதக் கட்சிகளின் வளர்ச்சிக்கும் அது சாதகமாக அமைகின்றதையும் காண முடிகின்றது.

குறிப்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசை எடுத்துக் கொண்டால் அதன் முக்கிய பதவிகளான செயலாளர் நாயகப் பதவி, கட்சியின் உறுப்புரிமை போன்ற விடயத்தில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அண்மையில் அதன் முக்கிய பொறுப்பில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹஸனலி, பஷீர் சேகுதாவுத் போன்றவர்களின் பதவி பறிக்கப்பட்டவையும் அதன் பின்னரான காலத்தில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளைக் குறிப்பிடலாம். இந்தப் பிரச்சினைகள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசைப் பொருத்தவரை பாரிய சவாலாகவே தொடர்கின்றன.

இதேபோல் அமைச்சர் றிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பொதுச் செயலாளர் வை.எல்.எஸ் ஹமீட் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டமை அதற்குப் பதிலாக புதியவர் நியமிக்கப்பட்டமை எல்லாம் உட்கட்சிப் பூஷல்களாகவே காணப்படுகின்றன. இவ்வாறு கட்சிகளுக்குள் ஏற்பட்டு வரும் குளறுபடிகளும் பிரச்சினைகளும் முஸ்லிம் சமூகத்திற்கு எதிர்காலத்தில் ஆபத்தான அரசியல் நிலைமைகளையே தோற்றுவிக்கும்.

முஸ்லிம் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு பல்வேறுபட்ட தரப்பினராலும் முஸ்லிம் அரசியல் வாதிகளின் ஒற்றுமையை வலியுறுத்தி அறிக்கைகள் விடுக்கப்பட்டு வருவதுடன் அதற்கான அழுத்தங்களும்கூட விடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் இவர்கள் அவற்றை கருத்திற் கொள்வதாக தெரியவில்லை என முஸ்லிம் புத்தி ஜீவிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எது எவ்வாறாக இருந்தாலும் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் ஒன்றிணைவு என்பது பலராலும் உணரப்பட்ட ஒன்றாகவே இருந்து வந்தாலும் தற்போதைய சூழ் நிலையில் ஒன்றிணைவு என்பது அவர்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ மேற் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தக் கட்டாயத் தேவை மேற்கொள்ளப்படா விட்டால் இனிவரும் எந்தத் தேர்தல்களிலும் முஸ்லிம்களின் அரசியல் பிரவேசம் என்பது கானல் நீராகவே அமையும். அந்தளவிற்கு முஸ்லிம்களின் அரசியல் நடவடிக்கைகள் பின்நோக்கிச் செல்வதையே காண முடிகின்றது.

எனவே முஸ்லிம் அரசியல் தலைமைகள் கட்சிகளை வளர்க்கவும், தமது இருப்புக்களை தக்க வைத்துக் கொள்வதையும் நோக்காகக் கொண்டு தமக்குள் சண்டையிட்டுக் கொண்டும் முட்டி மோதிக் கொண்டும் செல்வார்களானால் அது முஸ்லிம் சமூகத்தினை பாரிய குழிக்குள் தள்ளி விடுவதற்கான ஒன்றாகவே அமையும் என்பதுடன் இவர்களின் பதவி ஆசை காரணமாக இலங்கைவாழ் முஸ்லிம்கள் அரசியல் அந்தஸ்து அற்ற ஒரு சமுகமாக தத்தளிக்கும் நிலைமைகளே தோற்றம் பெறுவதற்கும் இனவாத சக்திகளின் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கும் முஸ்லிம்களின் அரசியல் பின்னடைவுகள் வழிவகுக்கலாம் என முஸ்லிம் சமுக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

## தொட்டவத்தை தாய் சேய் நிலையம் இன்று திறப்பு

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் கிராமோதய சபை சிந்தனையின் பிரகாரம் தொட்டவத்தைப்பிரிவின் முதலாவது கிராமோதய சபையின் தலைவரும் சமூகப்பணியாளருமான ஏ.எம்.எம். நளீம் ஹாஜியின் தலைமையில் உருவான கிராமோதய சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாணந்துறை தொட்டவத்தை தாய் சேய் சுகாதார நிலையக்கட்டடம் முழுமையாகப்புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய கட்டடத்தொகுதியின் முதற்கட்டம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

பாணந்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம அமைப்பாளரும் திறன் அபிவிருத்தி தொழிற்பயிற்சி அமைச்சருமான மஹிந்த சமரசிங்க நிகழ்வில் பிரதம அதிதியாகக்கலந்துகொள்ளவுள்ளார். பிரதி அமைச்சர்களான அஜித் பெரேரா , பாலித தெவரப்பெரும, மாகாண சபை உறுப்பினர்கள் பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் எம்.என்.எம். தாஹிர்பாஸி உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பாணந்துறை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் இபாஸ் நபுஹானின் முயற்சியால் புதிய வேலைதிட்டத்தின் அடிப்படையில் புதிய கட்டடத்தொகுதியின் முதற்கட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பிராந்திய வாழ் மக்களின் நன்மை கருதி பாணந்துறை தொட்டவத்தை கல்வி பொருளாதார அபிவிருத்திச்சங்கம் கொழும்பு மத்திய ரோட்டறிக்கழகத்தின் அனுசரணையில் மாதாந்தம் இலவச வைத்திய சேவையொன்றை கிராமோதய சுகாதார நிலையத்தில் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வேலையில்லா பட்டதாரி பிரச்சினை தீர்வுக்கு விசேட குழு

### அமைச்சர் ஹக்கீம் அறிவிப்பு




(பிறவ்ஸ் முஹம்மட்)

வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பிரதமர் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடாத்தி, தற்போது அதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

காரைதீவில் 6 நாட்களாக சத்தியாக்கிரக பேராட்டத்தில் ஈடுபட்டுவரும் அம்பாறை மாவட்ட பட்டதாரிகளை கடந்த சனிக்கிழமை (04) அமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடினார். அங்கு கருத்து தெரிவித்த ரவூப் ஹக்கீம் மேலும் கூறியதாவது,

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறைசேரி அனுமதி கிடைக்காத நிலையில், அவற்றை நிரப்புவதற்காக பிரதமரை சந்தித்து பேசுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தேன். அவர் பிரதமரை சந்தித்தபின்னர் அதனை கவனத்திற்கொள்வதாக பிரதமர் வாக்குறுதியளித்தார்.

அதன் பின்னர் மறுநாள், இதற்காக திறைசேரி மற்றும் பிரதமர் அலுவலர்கள் உள்ளடங்கிய குழுவொன்றை பிரதமர் நியமித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் உடனடியாக நிரப்பக்கூடிய வெற்றிடங்கள் குறித்து தன்னிடம் சிபார்சு செய்யுமாறு இக்குழுவிடம் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். இந்தக்குழுவின் அறிக்கையின் பின்னர், அதற்குள்ள வேலையற்ற பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான முற்சிகளை மேற்கொள்வோம் என்று ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

## விழிப்புணர்வு நிகழ்வு

(கிண்ணியா நிருபர் )

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் உளவளத்துணை பிரிவும் திருகோணமலை மாவட்ட செயலகமும் இணைந்து நடாத்தும் ஊடக பாவனையும் உளவியல் பாதிப்பும் என்ற தலைப்பில் ஊடகவியலாளர்களை விழிப்புணர்வூட்டும்

நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சிங்கபுர,4 ஆம் கட்டையில் அமைந்துள்ள திருமலை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு அழைப்பு விடுத்த குறித்த ஊடகவியலாளர்கள் பங்கு கொள்ளுமாறு திருமலை மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபரும் மேலதிக செயலாளருமான எஸ்.அருள்ராசா தெரிவித்தார்.

## பெரியமடு பிரதேசத்தில் கடுமையான பனிமூட்டம்

(பாலாவி நிருபர் ஏ.ஏ.முனாப்)

மாந்தை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியமடு பிரதேசத்தில் கடுமையான பனி மூட்டமான கால நிலை நிலவுவதால் மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

விடத்தல் தீவு, பள்ளமடு, சன்னார், ஈஜச்ச அளவக்கை ஆகிய பிரதான வீதிகள் பலவற்றில் கடுமையான பனி மூட்டம் மற்றும் மழையுடனான காலநிலை காணப்படுகிறது.

தற்போது அதிகமான போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மற்றும்

சிறிய வீதிகள் பயணிக்கும் தங்கள் வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிரவிடுமாறு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பிறவிக்குறைபாட்டினால் வருடாந்தம் 3000 குழந்தைகள் மரணிக்கின்றனர்

பிறவிக்குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகள் மரணிக்கும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக புள்ளிவிபரங்கள் பதிவாகியுள்ளதாக வைத்தியர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார கல்விப் பணியகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், உலகில் மனிதப் பிறவியே சிறந்த படைப்பு ஆனால் அங்கவீனம் ஒருவனுக்கு பிறக்கும் போதே தோன்றுமாயின் அது அவனது பெற்றோர் இழைக்கும் தவறாகும். இவர்கள் உண்ணும் முறையற்ற உணவும், குடிபானங்களும், அழகுசாதன பொருட்களும் இப்படியான பல மறைமுக தாக்கங்களை கர்ப்பத்திலே ஏற்படுத்துகின்றன.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது சுகாதாரத்துறை நன்கு வளர்ச்சியடைந்த நாடாகவுள்ளது. இந்தியாவில் நூற்றுக்கு 40 சதவீத குழந்தைகள் தான் பிறக்கின்றனர்., மியன்மாரில் நூற்றுக்கு 30 வீதமாக குழந்தைகள் பிறக்கின்றனர். எஞ்சியவர்கள் இறக்கின்றனர். இருந்தும் இதில் 1 வயதுக்கும் குறைந்த குழந்தைகள் 2500-3000 வரை வருடாந்தம் மரணத்தை தழுவுகின்றன.

20 வயதுக்குள் 3600 மரணங்கள் ஏற்படுகின்றன. எனவே நாம் இன்று பொது மக்களிடம் பாடசாலை ரீதியாகவும் சமூக அமைப்புகள் மூலமாகவும் தெளிவுபடுத்தல் நிகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றோம். எதிர்காலத்தில் பிறவிக்குறைபாட்டுடன் குழந்தைகள் பிறக்கும் சதவீதத்தை கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள் தற்போது எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

## வரட்சியால் வாடும் மக்களுக்கு பவுசர்கள் மூலம் குடி நீர்



( மினுவாங்கொடை நிருபர் )

கம்பஹா மாவட்டத்தின் எட்டுத் தேர்தல் தொகுதிகளிலுள்ள 37,843 குடும்பங்கள், நாட்டில் நிலவும் வரட்சியான கால நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக, கம்பஹா மாவட்ட பிரதி செயலாளர் பிரசாத் இந்திக்க தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய, மீரிகம, கட்டான, கம்பஹா, அத்தனகல்ல, தொம்பே, மஹர ஆகிய எட்டுத் தேர்தல் தொகுதிகளிலேயே, மழையின்றி மக்கள் அவதிப்படுவதாகவும், இவர்களுக்குத் தேவையான சுத்தமான குடி நீரை வழங்குவதற்கு, அரச தனியார் நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன், தற்போது நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள எட்டு தொகுதிகளின் 339 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 37,843 குடும்பங்களைச் சேர்ந்த 1,58,820 மக்களுக்கு தொடர்ந்தும் ஆறு பவுசர்கள் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும், இதற்காக மேலும் 31 பவுசர்கள், 564 நீர் தாங்கிகள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## நூல் வெளியீடு

(மருதமுனை நிருபர்)

மருதமுனை ஜமீல் எழுதிய 'சிறகு முளைத்த ஊஞ்சல் சிறுவர் பாடல் நூல் வெளியீடு இன்று காலை மருதமுனை அல்-மதீனா வித்தியாலயத்தில் அதிபர் ஏ.ஆர் நிஃமத்துல்லா தலைமையில் நடைபெறும்.

உம்முல் குறா நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சட்டத்தரணி ஏ.எல்.றிபாஸ் கலந்து கொள்கின்றார். நூல் பற்றி கவிஞர் பாலமுனை பாறூக்கும், நூல் அறிமுக உரையை ஏ.எம்.குர்சித் நிகழ்த்தவுள்ளார்.நூலின் பிரதிகளை ஐ.நூறுல் பௌஸ்,ஏ. ஆர்.ஏ.சமீம் ஆகியோர் பெறுவார்கள்.

## கிண்ணியா தள வைத்தியசாலையின் பௌதீக வளம் குறித்து கள ஆய்வு

### சீனக்குழு விஜயம்



(கிண்ணியா கியாஸ் ஷாபி)

கிண்ணியா தள வைத்தியசாலையில் நிலவி வரும் பௌதீக வள பற்றாக்குறை சம்பந்தமாக கள ஆய்வு செய்து நோயாளர்களுக்கான விடுதி வசதி நிர்மாணித்துக் கொடுப்பதற்காக சீன நாட்டின் குழுவொன்று கடந்த சனிக்கிழமை வைத்தியசாலைக்கு விஜயம் செய்தது.

மத்திய சுகாதார பிரதி அமைச்சர் பைசல் காஸிமினால் அனுப்பி வைக்கப்பட்ட இந்தக் குழு , பிரதி அமைச்சரின் இணைப்புச் செயலாளர் எச்.எம்.எம். பாயிஸின் வழிகாட்டலின் கீழ், வைத்தியசாலையின் தேவைகளை அடையாளம் காண்பதற்காக நோயாளர் விடுதி உட்பட பெரும்பாலான இடங்களைச் சுற்றிப்பார்வையிட்டது. பின்னர் இந்த வைத்தியசாலையின் தேவைகள் குறித்து கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன் போது வைத்தியசாலையின் உடனடித் தேவைகள் குறித்து, குழவினருக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டன. இதில் மாவட்ட வைத்திய அதிகாரி எச்.எம். சமீம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர்.இந்த குழவின் விஜயம் குறித்து, சுகாதார பிரதி அமைச்சின் இணைப்புச் செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

மத்திய சுகாதார பிரதி அமைச்சினால் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரல் இது.கிழக்கு மாகாணத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், கிண்ணியா , மூதூர் ஆகிய வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக நவீன வசதிகளுடன் நான்கு கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான நிதியினை சீனக் குடியரசின் C.T.I.C என்ற நிறுவனத்திடம் கோரியிருக்கிறோம். அந்த நிறுவனத்தின் கட்டட நிர்மாண பொறியியலார் ,கட்டடக் கலைஞர், திட்ட மதிப்பீட்டு அதிகாரி, திட்ட அமுலாக்கல் அதிகாரி ஆகியோர் வருகை தந்துள்ளார்கள் என்று தெரிவித்தார்.

## நல்லாட்சிக்கு விசுவாசமாக இருக்கும்வரை எமது அபிவிருத்திகள் சாத்தியமாகும்

### பிரதியமைச்சர் அமீர் அலி

(வாழைச்சேனை நிருபர்)

எதிர்காலத்திலே எமது மக்கள் இந்த நல்லாட்சி அரசாங்கத்திற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு மிகவும் விசுவாசமான மக்களாக இருக்கின்ற போதுதான் இப் பகுதிகளுக்கான அபிவிருத்திகளை எங்களால் உங்களுக்குச் சுமந்து கொண்டு வரமுடியும் அவ்வாறு இல்லாவிட்டால் எமது பிரதேசத்திலே இவ்வாறான அபிவிருத்திகள் இடம்பெறாது என்று கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பிரதேசத்தில் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் வாழ்வாதாரம், வீதி அபிவிருத்தி, வடிகான் போன்ற பல்வேறு பிரச்சினைகளை ஒரு தனி அரசியல்வாதியின் சொந்த நிதியில் இருந்து மேற்கொள்ள முடியாத ஒரு விடயம் இவையெல்லாம் ஒரு அரசாங்கத்தில் இருக்கும் போது மாத்திரம் தான் தங்களது கோரிக்கையை ஜனாதிபதி,பிரதமர், அமைச்சர்களுக்கு தெரியப்படுத்தி எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை அவர்களின் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி உதவ முடியும். இந்த நல்லாட்சி அரசாங்கத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கடந்த காலத்தில் ஆட்சி செய்தவர்கள் மிகவும் மும்முரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னும் ஒரு வருடத்தில் இன்னுமொரு அதிகாரத்தை தமிழர்கள் பக்கத்தில் காண்போம் என்று மிரட்டுவதாகச் சொல்லுகின்றார்கள். நாங்கள் இப்போதும் கடந்த ஆட்சியில் ஏற்பட்ட கடனை அதனுடைய வட்டியைச் செலுத்துவதற்காக நாங்கள் அனைவரும் வரியைச் செலுத்திக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

மாதர் சங்க தலைவி பி.எஸ்.ஸபிக்கா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ரி.எம்.நளீம், ஏ.எஸ்.ஜனுபா, ஆர்.யோகமலர், பி.எம்.நூர்தீன், பிரதி அமைச்சரின் இணைப்பாளர்களான எச்.எம்.தௌபிக், எம்.எஸ்.றிம்மின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணியின் திருகோணமலை மாவட்ட மகாநாடு திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ஜனாதிபதியின் இணைப்பாளரும் ஸ்ரீ சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணியின் தலைவர் சாந்த பண்டார தலைமையில் இடம்பெற்றது. இதில் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரும் மூதூர் தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருமான நஜீப் ஏ. மஜீத், பிரதி அமைச்சரும் திருகோணமலை தொகுதி அமைப்பாளர், பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே, சேருவில தொகுதி அமைப்பாளர், நளீன் குணவர்த்தன, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பியந்த பத்திரன மற்றும் மகாநாட்டில் கலந்து கொண்ட இளைஞர் யுவதிகளையும் படங்களில் காணலாம்.

(கிண்ணியா - சஹ்ரின் எம். இஸ்மத்)

## பெயர் மாற்றம்

பொத்துவில்-15, களப்புக்கட்டு எனும் முகவரியில் வல்லிபுரம் யோகராணி ரவிக்குமார் எபேசியா, ரவிக்குமார் சுஜாந்தன், லோகேஸ்வரன் ஜிலோஜினி ஆகிய நாங்கள் எங்களது சுயவிருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு எமது பெயர்களை முறையே வல்லிபுரம் உம்முசல்மா, ரவிக்குமார் உம்மு சபிய்யா, ரவிக்குமார் அப்துர் ரஹ்மான், லோகேஸ்வரன் பாத்திமா றுஸானா என மாற்றிக்கொண்டோம் என இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசின் அனைத்து பொதுமக்களுக்கும் பகிரங்கமாகத்தெரியப்படுத்துகிறோம். இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவோம் என உறுதியளிக்கின்றோம்.

**வ. உம்முசல்மா,**
**ர.உம்மு சபிய்யா,**
**ர. அப்துர் ரஹ்மான்**
**லோ.பாத்திமா றுஸானா**

# முகமூடி கிழிந்த “உலகமயமாக்கல்”

ஜான் பெர்க்கின்ஸ் எழுதி, இரா முருகவேள் தமிழுக்கு மொழிபெயர்த்து விடியல் பதிப்பகம் வெளியிட்ட ''ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்'' நூலின் அறிமுகம்.

**- நஸீஹா முஹிதீன்**

நூலாசிரியர் ஜான் பெர்க்கின்ஸ் தனது வாழ்வில் அமெரிக்க ஏகாதிபத்திய அரசியலுக்காக மறைமுகமாக பொருளாதார அடியாளாக இருந்து செய்யநேர்ந்த வேலைகளைப் பற்றிக் கூறும் நூலே இது.

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், அந்நிய மூலதனம் போன்றவற்றால் எவ்வாறு வளரும் நாடுகளின் இயற்கை வளம் சுரண்டப்படுவதைப் பற்றியும், இயற்கை வளம் எண்ணெய் வளம் மிகுந்த பகுதிகளில் பழங்குடிகளை இடம் பெயரச் செய்து, இயற்கை வளங்கள் கைப்பற்றப்படுவதைப் பற்றியும், சுரண்டலை எதிர்த்து நிற்கும் நாடுகளின் ஓமர் டோரிஜோஸ் போன்ற தலைவர்களும், பொருளாதார அடியாள்கள் தோல்வியுற்ற ஈராக் போன்ற நாடுகள் அழிக்கப்பட்டதைப் பற்றியும் இந்நூல் பேசுகின்றது.




உலகமயமாக்குதல் எனும் சொல்லானது 1970களில் உருவாக்கப்பட்டதாகும். அமெரிக்க வணிகச் சங்கங்களின் செயல்களை விளக்குவதற்காகவே இச் சொல் பயன்படுத்தப்பட்டது.

1981இல் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த றீகன் தனது நாட்டின் சர்வதேச அரசியல் பொருளாதார தொடர்புகளில் அதிரடியான மாற்றங்களை கொண்டுவந்தார். இதன் விளைவாக பலம் பொருந்திய டொலர் எனும் கொள்கை உருவாகியது. இக்கொள்கை மூலம் பெறப்பட்ட வருமானம் அமெரிக்காவின் ஆயுத கொள்வனவிற்கும், அன்றைய சோவியத் நாடுகளின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டது. இதுவே சோவியத் வீழ்ச்சியுறவும் ஒரு காரணமாயிற்று.

1992இல் பதவி வகித்த புஷ் ஏற்றுமதியைப் பெருக்குவதிலும், உலக வர்த்தக நிறுவனங்களை உருவாக்குவதிலுமே முனைப்பு காட்டினார். ஆனால் நிறுவணங்களோ இலாபம் ஈட்டவே முயன்றன. வெளிநாட்டில் பொருள் உற்பத்தி செய்ய எண்ணம் கொண்டன. ஆகவே இந்நிறுவனங்கள் அனைத்தும் அயல்நாட்டு நிறுவனங்களுடன் போட்டி போடலாயின. பல ஆண்டுகளாக பனிப் போரின் காரணமாக தாம் பின் தங்கி இருப்பதாகவும், ஏனைய நாடுகளைவிட அமெரிக்கா முன்னேற்றம் காண வேண்டும் எனவும் அமெரிக்க வர்த்தக நிறுவனங்கள் கோஷம் எழுப்பலாயின. மேலும் தீவிர போட்டியில் இறங்கவேண்டும் எனவும் கருத்து தெரிவித்தன. இவ்வாறு மெல்ல மெல்ல வியாபிக்கப்பட்ட உலகமயமாக்கலால் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார ஆக்கிரமிப்பு மிக மோசமாக அமைந்தது.

இப்படிப்பட்ட மிக மோசமான உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், அந்நிய மூலதனம் போன்றவற்றால் வளரும் நாடுகள் சுரண்டப்படுவதைப் பற்றியும், இயற்கை வளம், எண்ணெய் வளம் மிகுந்த பகுதிகளில் பழங்குடிகளை இடம் பெயரச் செய்து, இயற்கை வளங்கள் கைப்பற்றப்படுவதைப் பற்றியும், சுரண்டலை எதிர்த்து நிற்கும் நாடுகள் அழிக்கப்பட்டதைப் பற்றியும் இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

நூலாசிரியர் ஜான் பெர்க்கின்ஸ் தனது வாழ்வில் அமெரிக்க ஏகாதிபத்திய அரசியலுக்காக மறைமுகமாக பொருளாதார அடியாளாக தான் செய்ய நேர்ந்த வேலைகளைப் பற்றி விரிவாக இதில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார ஆதிக்கத்திற்காக உலகம் முழுவதும் எத்தகைய அயோக்கியத்தனமான திரைமறைச் சதிவேலைகளை செய்து வருகிறது என்பதையும் வெளிச்சத்துக்கு கொண்டு வருகிறது இந்நூல்.

பெரும் தொழில் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச வங்கிகள், ஒத்துழைக்கும் அரசுகள் என இந்தக் கூட்டணியின் இயக்கத்தை மிக விரிவாகப் பல எடுத்துக்காட்டுகளுடன் நமக்கு விளக்குகிறது இந்நூல். நாள்தோறும் பல்லாயிரம் பேர் பட்டினியால் செத்துமடிய, மறுபுறம் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை செழிப்புடன் விளக்கொளியில் மின்னுகிறதென்பதை பெர்கின்ஸ் மிக உறுதியாக வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

உலகமயமாக்கல் மூலமாக உலகமே இன்றொரு சிறிய கிராமமாக மாறி விட்டது என்று கூறிக் கொண்டு இருப்பதை மறுத்து உலகமயமாக்கல் என்ற பெயரில் நாடுகள் கொள்ளையிடப்படுகின்றன. நாட்டின் இயற்கை வளங்கள், மனித வளங்கள் உலகில் உள்ள பெரு நிறுவனங்களால் பங்கிடப்படுகின்றன. இதுவே உலகமயமாக்கல் என்ற ஒரு கோட்பாட்டின் படி நிகழ்ந்து கொண்டு இருக்கின்றது. நம்புவதற்கு கடினமாக இருக்கின்றதல்லவா? இதில் தான் உலகமயமாக்கல் என்ற கோட்பாட்டின் வெற்றி அடங்கி இருக்கின்றது.

முன்னேற்றம், வளர்ச்சி என்ற முகமூடிகளை அணிந்து கொண்டு உலாவும் அவைகளின் உண்மையான முகங்களை காண்பது என்பது சாதாரண மக்களுக்கு எளிதான விடயம் அல்ல தான். ஆனால் உலகம் இன்று மிக வேகமாக அழிவுப் பாதையை நோக்கி சென்றுகொண்டிருக்கும் போது, அதற்கு காரணியாக இருக்கும் ''உலகமயமாக்கல்'' எனும் கோட்பாட்டின் முகமூடியை கிழித்து அதன் உண்மையான முகத்தினை உலகிற்கு காட்ட வேண்டிய தேவை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது அதிகமாக இருக்கின்றது. இதுவே ஜான் பெர்கின்ஸ் அவர்களின் கருத்தாகும். இந்நிலையில் அப்படிப்பட்ட முகத்திரையை கிழிக்கும் ஒரு முயற்சியாகவே இந்தப் புத்தகம் வெளிவந்திருக்கின்றது.

# வான் பிறை



## தீயை தீயால் அணைக்காதீர்

தீயினை தீயால் அணைக்க முற்பட்டால் அது தீயின் வேகத்தினை அதிகரிக்குமல்லவா? இதற்கு உதாரணமாக இரண்டு ஆசிரியர்களின் வழிமுறைகளின் வேறுபாடுகளைச் சொல்லி விளக்கலாம் என நினைக்கின்றேன்.

ஒரு ஆசிரியர் தனது வகுப்பில் நுழைந்து மாணவர்களைப் பார்த்து ஆளுக்கு ஒரு பேப்பரை எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஒரு பாடம் சம்பந்தமாக உங்களிடம் டெஸ்ட் வைக்கப் போகிறேன் என்றார். மற்ற மாணவர்கள் பேப்பரை எடுத்து எழுத தயாராக இருக்கும் போது ஒரு முரட்டு மாணவன் மட்டும் திடீர் என்று சொன்னால் எப்படி எழுதுவது என்றான். உடனே அந்த ஆசிரியர் அந்த மாணவனை 'மடையா, முட்டாள், நீ மாடு மேய்க்கத்தான் லாயக்கு என்று திட்டினார்.

வெட்கப்பட்ட அந்த மாணவனும் ஆசிரியரை பதிலுக்குத் திட்ட ஆரம்பித்தான். விடயம் பாடசாலை நிர்வாகத்திற்குப் போய், அந்த மாணவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால் அந்த ஆசிரியர் ஒரு மாணவனிடம் திட்டு வாங்கிய செய்தி காட்டுத் தீ போல் மாணவர் மற்றும் ஆசிரியர்களிடையே பரவியது. அந்த ஆசிரியரை பாடசாலையில் எல்லோரும் ஒரு மாதிரியாக பேச ஆரம்பித்ததால் வெட்கப் பட்ட அந்த ஆசிரியர் பாடசாலையைவிட்டு வேறு பாடசாலைக்குச் சென்று விட்டார்.

அதற்குப் பதிலாக இன்னொரு ஆசிரியார் வந்தார். அவரும் ஒரு திடீர் டெஸ்ட் வைத்தார். முரட்டு மாணவனும் முன்பு நடந்ததுபோல் மறுத்தான். ஆனால் ஆசிரியர் உன்னால் எழுத முடியா விட்டால் வகுப்பினை விட்டுப் போய் விடலாம். விருப்பமுள்ள மாணர்கள் எழுதட்டும் என்றார். எல்லா மாணவர்களும் பேப்பரினை எடுத்து எழுதும் போது அந்த மாணவனும் வேறு வழியில்லாமல் எழுத ஆரம்பித்தான். ஆகவே ஒரு முரண்பாடான, முரண்பட்ட நடத்தையினை தவிர்ப்பது நல்லதல்லவா?

ஒரு கொலையாளி சிறு கோபத்திற்குக் கூட தன் சொந்த பந்தங்களை நண்பர்களை கொலை செய்துவிடக்கூடும். ஒரு மனிதன் பலசாலி என்பது ஒருவரை தரையில் வீழ்த்துவதில்லை. மாறாக ஒருவடைரு கோபத்தினை அடக்குவதுதான்

# பாடசாலைக் கல்வியின் இன்றைய நிலை!

**- எம்.எம்.ஏ.ஸமட்**

பாடசாலைக் கல்வி முறைமையானது ஆசிரியர் மையக் கல்வி முறையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் முழுக்க முழுக்க ஆசிரியர்களின் பங்களிப்பு என்ற நிலையிலிருந்து மாறி ஆசிரியர்களின் உதவியோடு மாணவர்கள் அவர்களாகவே முயற்சி செய்து கற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இந்த மாணவர் மையக் கற்றல் முறையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றமடைந்து வரும் உலகின் கல்வித் துறைக்கு ஏற்ப இலங்கையின் கல்வித்துறையிலும் காலத்திற்குக் காலம் மாற்றம் ஏற்படுத்தப்படுகிறது. அதற்கேற்ப பாடசாலைப் பாடத்திட்டங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால், இந்த மாற்றங்கள் உரியமுறையில் உரியவர்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? பின்பற்றப்படுகின்றனவா? என்பது தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். ஏனெனில், பாடசாலைகளில் மாற்றப்பட்டுள்ள இந்த கற்றல், கற்பித்தல் முறைமையானது எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை என்ற விமர்சனமும் காணப்படுகிறது.

ஆசிரியர்களின் உதவியோடு மாணவர்கள் செயற்பாட்டுப் பொறிமுறைகளுடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். சுயகற்றலுக்கான தேடல்களில் முனைப்புக் காட்ட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்ட இந்த மாணவர் மையக் கற்றல் முறைமையானது ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில், இந்த முறைமை பெற்றார் மையக் கல்வி முறைமையா எனச் சமகாலத்தில் சிந்திக்கச் செய்துள்ளது.

ஏனெனில், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற செயன்முறைக் கல்விச் செயற்பாடானது பெற்றோர்களுக்கு அழுத்தம் கொடுப்பதாகவே அமைந்துள்ளதைக் காண முடிகிறது. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளில் அக்கறைகொள்ள வேண்டும் என்பதை ஊக்குவிப்பதற்காக இந்த செயற்பாடுகள் அமைந்தாலும், ஒரு செயன்முறைப் பயிற்சியுடன் தொடர்பான கல்வி நடவடிக்கைக்காக மாணவர்களினால் பெற்றோர்கள் வலிந்து செயற்படச் செய்யப்படுகிறார்கள். உதாரணத்திற்கு, காற்றில் பறக்கும் பொருள் ஒன்றை செய்து வருமாறு ஆரம்பப் பாடசாலை வகுப்பொன்றைச் சேர்ந்த ஒரு மாணவன் பாட ஆசிரியரினால் அறிவுறுத்தப்படுகின்றபோது, அந்த அறிவுறுத்தலை நடைமுறைப்படுத்துவது மாணவனாக இல்லாது அவனது பெற்றோரே அப்பொருளைத் தயாரித்துக் கொடுத்து பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்பி வைக்க வேண்டியுள்ளது. இதனால்தான் ஒரு சில விடயங்களில் மாணவர் மையக் கல்வியானது பெற்றோர் மையக் கல்வியாக மாற்றமடைகிறதா என வினவப்படுகிறது.

கல்வி முறை இவ்வாறு உள்ள நிலையில் பரீட்சை முறைமையும் ஞாபக சக்திக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குவதாகவே காலகாலமாக இருந்து வருகிறது. இலங்கையில் இலவச் கல்வி முறை அறிமுகப்படுத்தப்;பட்டது முதல் எழுத்தறிவு கொண்டோரின் எண்ணிக்கை அதிகரித்தே வந்துள்ளது. தற்போதைய இலங்கையின் எழுத்தறிவு வீதம் 98 சதவீதமாகவுள்ளது என்பதும் இது தெற்காசிய நாடுகள் அனைத்தை விடவும் அதிக வீதமாகவுள்ளமையையிட்டு இலங்கை மக்களாகிய நாம் பெருமைப் பட்டாலும், நமது கல்வி முறைமையிலும் பரீட்சை முறைமையிலும் மேலும் மாற்றம் செய்யப்பட வேண்டிய தேடிவையுள்ளது.

அப்போதுதான், நவீன உலகின் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி பெறுவதற்குரிய எதிர்கால சந்தியினரை உருவாக்க முடியுமாக இருக்குமென கல்விமான்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உளவளத்துணை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றின் செயற்பாடுகள் வினைத்திறன்மிக்கதாக அமையவில்லை என்ற குற்றச் சாற்றுகள் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகி;ன்றன.

குறிப்பாக, பாடசாலைகளில் வழிகாட்டல் மற்றும் உளவளத் துணை செயற்பாடானது தொழில்வாண்மை உளவளத்துணையாளர்களினால் முன்னெடுக்கப்படுவதில்லை. மாறாக ஓரிரு மாத கால உளவளத்துணைக்கான பயிற்சிகளை நிறைவு செய்தவர்களினால் இத்தகைய சேவை முன்னெடுக்கப்படுவதானது அச்செயற்பாடுகளில் வினைத்திறன்மற்ற நிலையை ஏற்படுத்துவதுடன் எதிர்பார்க்கின்ற வெற்றியையும் அளிப்பதாக அமையவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது. இதன்நிமித்தம், பாடசாலைகளில் உளவளத் துணையாளர்களாக நியமிக்கப்படுகின்றவர்கள் தொழில்வாண்மை தகைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்படுகின்றமையையும் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

வழிகாட்டல் மற்றும் உளவளத்துணை செயற்பாடுகள் உரிய முறையில் வினைத் திறனுடன் முன்னெடுக்கப்படுகின்றபோது இவ்வாறான பரீட்சை முடிவுகள் மாணவர்கள் மத்தியில் பாதிப்புக்களை ஏற்படுத்தாது பாதுகாக்கும். அத்துடன் அவர்களிடத்தில் தன்னம்பிக்கையை வளர்க்கக் கூடியதாகவும் அமையும்.அதனால், கல்வி வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற வெற்றி தோல்விகள் அவர்களது எதிர்காலத்தை சூனியமாக்காது வளமுள்ளதாக்குவதற்கான சிறந்த வழிகாட்டல்களும் உளவளத்துணை வழங்கலும் அவசியமாகிறது. இவை அவர்களின் கல்வி வாழ்க்கைக்கு மாத்திரமின்றி, முழு வாழ்க்கை பயணத்திலும் சவால்களை எதிர்கொண்டு வெற்றியாளர்களாக மிளிர்வதற்கு வழிவகுக்குமென்பது நிதர்சனமாகும்.



# கல்விச் சுரங்கம்

**எம்.றிஷாட்**



## புத்தகம் வாசிக்கும் குழந்தைகளே அறிவாளிகள்

கணினி மூலம், மொபைல் போன் மூலம் நாம் நிறைய விஷயங்கள் படிக்கலாம், கேட்கலாம் பார்க்கலாம். ஆனால் பிடித்த ஒரு புத்தகத்தை கையில் வைத்து படிப்பதென்பதே மிகவும் சுகமான ஒரு அனுபவம் என்பது படிப்பவர்களுக்கே தெரியும்.

அமைதியான ஓர் இடத்தில் அமர்ந்து, புத்தகத்தின் வாசத்தை அனுபவித்துக் கொண்டு படிப்பது மிகவும் இரசனைக்குரிய ஒன்று. ஆனால் ரசிப்பது என்பதை கடந்து புத்தகம் வாசிப்பது நம் உடல் மற்றும் மனதின் ஆரோக்கியத்தை வளர்க்கிறது என்பதே சுவாரசியமான உண்மை.

சிறு வயதிலிருந்து புத்தம் படிக்கும் குழந்தைகள் புத்திக்கூர்மை மற்றும் ஞாபக சக்தி கொண்டவர்களாக திகழ்கிறார்கள் என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.புத்தகம் வாசிப்பது, டி.வி. பார்ப்பதை விட 50 சதவிகிதம் அதிக வார்த்தைகளை தெரிந்துகொள்ள உதவுகிறதாம்.இதனால் இக்குழந்தைகள் வார்த்தை விளையாட்டு, பொது அறிவு போட்டிகளில் இயல்பாகவே அதிகளவில் வெற்றி பெறுகிறார்களாம்.தொடர்ந்து புத்தகம் படிப்பவர்களுக்கு வயதாவதினால் ஏற்படும் ஞாபக மறதி ஏற்படுவதில்லை.

படிக்கும் போது நரம்பு செல்களிடையே தகவல்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருப்பதாலும், புதுப் புது தகவல்களை படிப்பதால் புதிய நரம்பு செல்களின் தடங்கள் ஊக்கப்படுத்தப்படுவதாலும் டிமன்ஷியா,அல்சீமர் போன்ற ஞாபக மறதி நோய்கள் தவிர்க்கப்படுகிறது அல்லது அதன் தாக்கம் குறைகிறது.

புத்தகம் படிக்கும் பழக்கத்தினால் பிறருடைய இடத்தில் இருந்து பார்க்கவும், பிறருடன் தொடர்பு கொள்வதில் திறமையும் மேம்படுகிறது.குழந்தைகளுக்கு படுக்கும் முன்பு புத்தகம் படித்து காண்பிப்பது, பெரியவர்களும் படுக்கைக்கு செல்லும் முன் படிப்பது உடல் மற்றும் மனத்தை தளர்வடைய வைக்கிறது. இதனால் உறக்கம் நன்றாக வருகிறது. படித்த விஷயங்களை ஆழ்மனது உள்வாங்கிக் கொண்டு அசைபோடவும் இது உதவுகிறது.புத்தகம் படிக்கும் குழந்தைகள் பதட்டம் இல்லாமல் அமைதியாக அதிக நேரம் இருக்கிறார்கள். வீடியோ கேம் போன்றவைகள் அவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதாக இருந்தாலும் ஒருவித பதட்டத்தையும் கிளர்ச்சியையும் தொடர்ந்து அவர்களிடம் ஏற்படுத்தி விடுகிறது.ஆனால் புத்தகம் படிக்கும் போது மிகிழ்ச்சி கிடைப்பதுடன் நிதானம். பொறுமை போன்ற குணங்கள் மேலோங்குகி

### கல்விச் செய்திகள்

பரீட்சை வினாத் தாள்களை அச்சிடும் விடயத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் பலப்படுத்த பரீட்சைகள் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஷ்பகுமார கூறியுள்ளார்.தரவு வங்கியிலிருந்து வினாக்கள் பெறப்பட்டு இடைக்கிடை வினாக்களும் அச்சாகவுள்ளன.பரீட்சை வினாத் தாள்களை மட்டுப்படு த்தப்பட்ட சிலர் மீள்பரிசீலித்து அச்சுக்குச் சமர்ப்பிப்பார்கள் என்றும் புஷ்பகுமார தெரிவித்தார். விஞ்ஞானம் போன்ற ஒரு பாடத்தக்கு 3000 வினாக்கள் இருக்கும். தேவைப்பட்ட வினாக்களே தெரியப்பட்டு அச்சுக்கு அனுப்பப்படவுள்ளன.

# மஹிந்தவின் பிரஜா உரிமை பறிப்பில் எதிரணிக்கே அதிக விருப்பு

- எம்.ஏ.முஹம்மட் உவைஸ்

முன்னாள் ஜனாதிபதியை அரசியலில் இருந்து முற்றாக ஒதுக்கும் நோக்கில் அவரது பிரஜா உரிமையை பறிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று பரப்பட்ட செய்தியை அமைச்சர் ராஜித சேனாரத்ன மறுத்துள்ளார். அவரது பிரஜா உரிமையை பறிப்பதுபற்றி கனவில்கூட நினைத்துப் பார்க்கவில்லை என்றும் மஹிந்தவுடன் இருப்பவர்கள்தான் அவரது பிரஜா உரிமை பறிக்கப்பட வேண்டுமென விரும்புகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

**சிங்களத் தொலைகாட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார். அந்தப் பேட்டியின் முழு விபரம் கீழே தரப்பட்டுள்ளது:**

**Q:** சிறிலங்கா சுதந்திர கட்சியில் உள்ள சிலர் மஹிந்த அணியை இணைத்து அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு முயற்சி செய்கின்றனர். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

**A:** மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எவையும் இல்லை.யுத்தம் முடிந்த பின் இந்த நாடு எப்படி பயணிக்க வேண்டும் என்பதை நான் மஹிந்தவுக்கு எடுத்துக் கூறினேன்.முதலில் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டவர் பின்பு மாறிவிட்டார். ஆறு மாதங்களில் எல்லாம் தலைகீழாகிப் போனது.

குடும்பத்தின் வலைக்குள் வீழ்ந்து எல்லாவற்றையும் கெடுத்துக்கொண்டார்.போர்க்குற்றம் தொடர்பில் நானே அவரிடம் முதலில் கூறினேன்.சர்வதேசம் இது பற்றிப் பேசும்முன்-இது தொடர்பில் எமக்கு அழுத்தம் கொடுக்குமுன் நாம் இது தொடர்பில் தேடி பார்த்து நடவடிக்கை எடுப்போம் என்று கூறினேன்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததை உலகம் பெரிதுபடுத்தாது.யுத்தத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் பற்றியே உலகம் தேடும்.இதை உணர்ந்ததால்தான் நெல்சன் மண்டேலா நடவடிக்கை எடுத்தார்.நாமும் நடவடிக்கை எடுப்போம் என்றேன்.

போர்க்குற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுத்து தமிழர்களுக்கும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு நோபல் பரிசைப் பெறுவதற்கு முயற்சிப்போம் என்று மஹிந்தவுடன் கூறினேன்.நோபல் பரிசுக்கான விண்ணப்படிவத்தைக்கூட அவருக்குப் பெற்றுக் கொடுத்தேன்.ஒன்றரை மணிநேரம் இது தொடர்பில் நான் அவருடன் தனிமையில் பேசினேன்.

இதெற்கெல்லாம் உடன்பட்டவர் பிறகு மாறிவிட்டார்.நான் கூறியதைக் கேட்டு செயற்பட்டிருந்தால் இன்னும் 20 வருடங்களுக்கு மஹிந்த ஆட்சியில் இருந்திருப்பார்.அவரது குடும்பம் அவரை நாசமாக்கிவிட்டது.

உண்மையில்,மஹிந்த அடிப்படையில் நல்ல மனிதர்.பாடசாலைக் காலத்தில் இருந்து நான் அவருடன் பழகுகிறேன்.நாம் கூறும் ஆலோசனைகளைக் கேட்டு செயற்படக்கூடியவர். ஆனால்,யுத்த வெற்றியின்பின் அவர் மாறிவிட்டார்.நாம் சொல்வதைக் கேட்பதில்லை.

பின்னாளில் இதையெல்லாம் உணர்ந்து எம்மிடம் மனவேதனைப்பட்டார்.நீங்கள் கூறிய ஆலோசனைகளைக் கேட்டு நடந்தபோது எல்லாம் வெற்றியில் முடிந்தது.இப்போது எதைச் செய்தாலும் தோல்வியிலேயே முடிகின்றது என்று என்னிடம் கூறினார்.நல்லவற்றைச் செய்வதற்கு அவரது குடும்பம் அவரை விடவில்லை.

தமிழருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவில்லை.நாட்டுக்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை.தொடர்ந்தும் அவர் குடும்பச் சதிக்குள்தான் சிக்கி இருக்கின்றார். சந்தர்ப்பம் கையில் இருந்தும் அவர் தோல்வியடைந்த அரசியல்வாதியாவிட்டார். அப்படிப்பட்டவரால் எப்படி இனி அரசியலில் சாதிக்க முடியும்?

**Q:** இப்போதேனும் அவர் மாறி இருப்பாரா?

**A:** நிச்சயமாக இல்லை.அவர் இப்போது இனவாத அரசியல் பயணத்தைக் தேர்ந்தெடுத்துள்ளார்.முற்றாக இனவாதியாக மாறிவிட்டார்.அதனால்தான் அரசியலமைப்பைத் தயாரிக்கும் வழிநடத்தல் மற்றும் உப குழுக்களில் இருந்து அவரது அணி விலகியுள்ளது.

இனவாத அரசியலுக்குள் நுழைந்தால் ஒருபோதும் அதில் இருந்து விடுபட முடியாது.அரசியலில் இருந்து அழிந்துபோகும்வரை அது தொடரும்.அப்படி நடப்பதுதான் நல்லது. இனவாதத்தை வைத்து அரசியல் செய்பவர்களுக்கும் செய்ய முற்படுபவர்களுக்கும் அது ஒரு பாடமாக அமையும்.

**Q:** சம்பிக்க ரணவக்கவும் அதே அரசியலைத் தானே செய்தார்.?

**A:** ஆம்.ஆனால்,அவர் இப்போது மாறிவிட்டார்.உரிய நேரத்தில் அதில் இருந்து கழன்றுவிட்டார்.உலக அரசியல் போக்கைப் பார்த்து-உலக ஜனநாயகத்தைப் பார்த்து தன்னைத் திருத்திகொண்டார். இப்போது அவர் சர்வதேச அரசியல்பற்றி -சர்வதேச ஜனநாயக தலைவர்கள் பற்றி பேசத் தொடங்கியுள்ளார்.

அவர் ஒரு சிறந்த கல்விமான் என்பதால் நன்கு சிந்தித்துப் பார்த்து இனவாத அரசியலில் இருந்து தப்பிவிட்டார். ஆனால்,மஹிந்ததான் அதில் இருந்து இன்னும் மீளவில்லை.அநியாயமாகச் சிக்கிக்கொண்டார்.

**Q:** மஹிந்த அரசுக்கு எதிராக ஊழல்,மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே நீங்கள் அதிலிருந்து விலகினீர்கள். ஆனால்,மஹிந்த தரப்பு இப்போது உங்களின் அரசுமீது ஊழல்,மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றதே?

**A:** அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்கான ஏற்பாடுதான் இது.என்மீதும் மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.அது தொடரில் நிதிக் குற்றப்பிரிவின் முன் தோன்றி வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளேன்.

மஹிந்த ஆட்சியில் இடம்பெற்ற அதிகமான ஊழல்.மோசடிகளை நாம் வெளியில் கொண்டுவந்துகொண்டு இருக்கின்றோம்.சிலரைக் கைது செய்தும் இருக்கின்றோம்.ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணியின்போது இடம்பெற்ற 5000 கோடி ரூபா மோசடி தொடர்பில் நாம் இப்போது கேள்வி எழுப்பியுள்ளோம்.அதற்கு அவர்களிடம் இருந்து எதுவித பதிலும் வரவில்லை.

இவ்வாறு பல மோசடிகளை நாம் வெளியில் கொண்டு வருவதால் இதைத் திசை திருப்புவதற்காக மஹிந்த தரப்பினர் எம்மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்துகின்றனர்.

**Q:** மஹிந்த அணியில் உள்ள ஊழல்,மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள பலர் அரசுடன் இணைவதற்கு முற்படுவதாகக் கூறப்படுவதில் உண்மை உண்டா?

**A:** உண்மை.அவர்கள்மீதான குற்றச்சாட்டுக்கள் இறுக இறுக அவர்கள் அரசுடன் இணைவதற்கு முயற்சி செய்கின்றனர்.பலர் ஐக்கிய தேசிய கட்சியில் இணைவதற்குக்கூட முயற்சி செய்தனர்.பிரதமருடன் பேசினர்.பிரதமர் நிராகரித்துவிட்டார்.ஊழல்வாதிகளை இணைப்பதில்லை என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கின்றார்.

ஊழலில் ஈடுபடாதவர்கள் எவராக இருந்தாலும் அரசுடன் இணையலாம். அவர்களுக்காக அரசின் கதவு திறந்தே இருக்கும்.

**Q:** ஒரு சிறிய குழுவே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.இது உண்மையா?

**A:** ஆம்.எனது அமைச்சிலும் இந்தப் பிரச்சினை இருந்தது.நான் துணிச்சலுடன் எதிர்த்து நின்றதால் அந்தத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது.எதைப்பற்றியும் சிந்திக்காத சில அதிகாரிகள் விரும்பியவாறு செயற்படப் பார்க்கின்றனர்.அதற்கு இடங்கொடுக்க முடியாது.

துணிச்சல் அற்ற சில அமைச்சர்கள் இந்தக் குழுவிடம் சிக்கிக்கொள்ளவே செய்கின்றனர்.அவர்கள் இக்கட்டு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

நல்லாட்சி என்பது ஏழை மக்களுக்குத்தான்.திருடர்களுக்கு அல்ல.அதனால் நல்லாட்சியைப் பாதுகாப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.உயிரைப் பணயம் வைத்து இந்த ஆட்சியை உருவாக்கி இருக்கின்றோம்.நாம் தோல்வியடைந்திருந்தால் எங்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று சொல்ல முடியாது.

இருந்தாலும்,வருவது வரட்டும் என்ற துணிச்சலுடன் நாம் மஹிந்தவை எதிர்த்து களத்தில் இறங்கினோம். ஆனால்,எம்மைப் போன்று எந்தவித தியாகங்களையும் செய்யாத சிலர் கோட் சூட்களை அணிந்துகொண்டு சலுகைகளை அனுபவிப்பதற்கும் பொருளாதாரத்தைச் சீர்கெடுப்பதற்கும் முயற்சிக்கின்றனர்.

**Q:** உண்மையில்,இந்த ஆட்சி நல்லாட்சி என்ற பதத்துக்கு கட்டுப்பட்டு செயற்படுகின்றதா?



**A:** ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வியடைந்து மஹிந்த வெற்றிபெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். 2010 ஜனாதிபதித் தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரே காரணத்துக்காக சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆனால்,நாம்,2015 ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று அப்படி ஏதும் செய்தோமா?எம்மை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரை சிறையில் அடைத்தோமா?

நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜானதிபதியின் அதிகாரங்கள் பலவற்றை எடுத்து நாடாளுமன்றிற்குக் கொடுத்துள்ளோம். வெள்ளை வான் இல்லை. வடக்கில் எந்த இடத்திலும்-எப்போது வேண்டுமானாலும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்யலாம். அங்கு இளைஞர்கள் நிம்மதியாகத் தூங்கி எழும்புகின்றனர்.

முஸ்லிம்களுக்கு இப்போது ஹலால் பிரச்சினை இல்லை.மஹிந்த ஆட்சியில் வாய் திறக்க முடியாமல் இருந்தவர்கள் எல்லோரும் இப்போது வாய் திறக்கின்றனர்.அதுவும் எமக்கு எதிராக வாய் திறக்கின்றனர் என்பதுதான் இங்கு குறிப்பிடக் கூடியது.

இருந்தாலும்,குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றனர். ஜனநாயகம் முழுமையாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.அபிவிருத்தியடைந்த நாடுகளில்தான் ஜனநாயகம் முழுமையாக இருக்கும்.அதற்கு காரணம் அந்த மக்களின் மனங்கள்.அவர்கள் ஜனநாயகத்தை முழுமையாக மதித்து நடப்பவர்கள்.இங்கு அவ்வாறில்லை. ஆயினும்,மஹிந்த ஆட்சியுடன் ஒப்பிடுகையில் எமது அரசு எவ்வளவோ மேல்.

**Q:** லசந்தவின் கொலையாளிகளுக்கு தண்டனை வழங்குவீர்களா?

**A:** நிச்சயமாக. அவரது கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் வழங்கி இருக்கும் வாக்குமூலத்தின் அடிப்படையில் பார்க்கும்போது யார் குற்றவாளி என்பது தெரிகின்றது.குற்றவாளி நிச்சயம் தண்டிக்கப்படுவார்.எந்தவிதமான அழுத்தங்கள் வந்தாலும் நாம் விடமாட்டோம். அப்போது சரியான தீர்மானத்தை எடுப்போம்.

**Q:** மஹிந்தவின் பிரஜா உரிமையைப் பறிக்கப் போவதாகக் கூறப்படுகின்றதே?

**A:** அவ்வாறு செய்யமாட்டோம். இதுபற்றி நாம் கனவிலும் நினைத்ததில்லை.இது ஒரு வதந்தியாகும்.தேவையற்றவகையில் ஒரு நாட்டு பிரஜையின் பிரஜா உரிமையைப் பறிக்கும் தேவை எமக்கு இல்லை.

மஹிந்தவின் கூட்டத்தில் உள்ளவர்கள்தான் அவரது பிரஜா உரிமை பறிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர் என்று நான் நினைக்கின்றேன்.மஹிந்தவை வைத்து அரசியல் இலாபம் அடைகின்ற அவர்கள் இந்த வதந்தியின் ஊடாகவும் அரசியல் இலாபத்தைப் அடைவதற்கு முற்படுகின்றனர்.

**Q:** அமைச்சரவை மாற்றம் ஏற்படுமா?

**A:** அதற்கான தேவை உண்டு. ஜனாதிபதியும் பிரதமரும் பேசி இதுதொடர்பில் ஒரு முடிவுக்கு வருவர்.விரைவில் அமைச்சரவை மாற்றம் ஏற்படும்.சிக்கலுக்குள் சிக்கி இருக்கும் அமைச்சுக்கள் மாற்றப்படும். திருப்தி இல்லையென்றால் எனது சுகாதார அமைச்சும் மாற்றப்படலாம். அமைச்சுமுக்கியமல்ல. மக்களுக்கான சேவைதான் முக்கியம்.எந்த அமைச்சை வழங்கினாலும் அதை ஏற்று மக்களுக்கு சேவை செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன். இருப்பினும்,இந்த வருட நடுப் பகுதிக்கு முன் மக்கள் நேயத் தீர்மாணங்கள் பல எடுக்கப்படும்.-என்றார்.







மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அமைப்பக்கப்பட்ட அவசர சிகிச்சைப்பிரிவும், மகப்பேற்று கட்டட திறப்புவிழாவும், மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் 09 மில்லியன் ரூபா நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட பெண் நோயாளர் விடுதியை திறந்து வைக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது. இதன் போது, கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர், பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக், கிழக்கு மாகாண ஆயுள்வேத பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீதர் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டு திறந்து வைப்பதை படங்களில் காணலாம்.

(பைஷல் இஸ்மாயில், அட்டாளைச்சேனை)

நவமணி



## டெங்கு நோயை கட்டுப்படுத்த பேருவளையில் தீவிர முயற்சிகள்

(பேருவளை விசேட நிருபர்)

பேருவளை சீனன்கோட்டைப் பகுதியில் தீவிரமாக பரவியுள்ள டெங்குநோயை கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் களத்தில் இறங்கியுள்ளனர்.

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவன நிர்வாக பொது சுகாதாரஅதிகாரி ஆர்.சிங்ஹபாகு தலைமையிலான 30 பொதுசுகாதார பரிசோதகர் குழுவினர் சீனன் கோட்டைப் பகுதியிலுள்ள பள்ளிவாசல்கள், அரபுக் கல்லூரிகள்,குர்ஆன் மத்ரஸாக்கள் பாடசாலைகள்,பாலர் பாடசாலைகள்,ஹோட்டல்கள் மற்றும் வீடுகளில் பரிசோதனையை மேற்கொண்டனர்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க ஒத்துழைப்புடன் சுகாதாரப் பகுதியினர் டெங்கு உற்பத்தியாகும் இடங்கள் பற்றி பரிசோதனை செய்தனர். டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு புகை விசுறும் பணி இடம் பெற்றது. சீனன்கோட்டை வீதி,பெரேராவீதி,நவ்பல் ஜாபிர் மாவத்தை, ஸாவியாவீதி,சாதுலியா வீதி,பளீல் ஹாஜியார் மாவத்த,தர்காவீதி,நளீம் ஹாஜியார் மாவத்த யூஸுப் எவனியு, ஸாலி ஹாஜியார் மாவத்த, ஸ்டேடியம் வீதி,சேக் பாஸி மாவத்த, ஜாபிர் எவனியு,சேக் இப்ராஹிம் மாவத்தை,தர்காவீதி ஆகிய பகுதிகளில் ஈடுபட்ட பொது சுகாதார பரிசோதகர்களுக்கு ஒத்துழைப்பாக அல்- ஹுமைஸரா தேசிய பாடசாலை உயர் வகுப்பு மாணவர்கள்,சமூக நல இயக்கங்களின் உறுப்பினர்கள், இளைஞர்கள் செயற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. தமது பணியை சிறப்பாக மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்கிய சீனன்கோட்டை வாழ் மக்களுக்கு பரிபாலன சுகாதார பரிசோதகர் ஆர்.சிங்ஹபாகு நன்றி தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்கமும் இரத்த பரிசோதனை முகாமொன்றை நடாத்தியபோது 250 இற்கு மேற்பட்டோர் பரிசோதனை செய்து கொண்டுள்ளனர். சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ராபிஸ் ஏ. கபூர்,பரதித் தலைவர் எம்.எஸ். எம் துகைன், இணைச் செயலாளர்களான எம்.எம்.எம். சஹாப், அரூஸ் அனஸ் உட்பட உறுப்பினர்கள்,டெங்குநோய் பரவியது முதல் தொடர்ந்தும் சுகாதாரப்பிரிவினருக்கு ஒத்துழைத்து வருகின்றனர்.

# அம்பாறை முஸ்லிம்களின் பிழையான முடிவுகளே ஆணவத் தலைமைக்கு வழிவகுத்தது

## மட்டு.வில் அமைச்சர் றிஷாத்

(சுஐப் எம்.காசிம்,பி.எம்.எம்.ஏ.காதர்)

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மேற்கொண்ட தவறான அரசியல் முடிவுகளினால் தான் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையின் ஆணவத்துக்கும் அப்பாவி முஸ்லிம்கள் சமூக பொருளாதார மற்றும் ரீதியில் நலிவடைவதற்கு பிரதான காரணமென்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தவறான பாதையில் பயணித்ததனாலேயே நாம் கட்சிக்குள் இருந்து கொண்டு தலைமையைத் தட்டிக்கேட்டோம். தலைமையின் பிழைகளை சுட்டிக்காட்டியதன் வெளிப்பாடே எம்மை கட்சியிலிருந்து வெளியேற்றக் காரணமாய் அமைந்தது.

வியாபாரம் செய்து கோடி கோடியாக பணம் சம்பாதிப்பதாக அந்தக்கட்சிக்குள் இருப்போரே இப்போது தெரிவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் சமூகக்கட்சியென நம்பியிருந்த அது, சமூகத்துக்கான சரியான வழிகாட்டலில் இருந்து தவறியதானாலேயே







அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியிலான விடயங்கள் தொடர்பில் மட்டக்களப்பு ஈஸ்ட் லெகூன் ஹோட்டலில் இடம்பெற்ற விசேட செயலமர்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் றிசாட் பதியுதீன் கலந்துகொண்டார்.

முன்னாள் உப வேந்தரும் கட்சியின் முக்கியஸ்தருமான கலாநிதி இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைதீன் ஹாஜியார் உட்பட கட்சியின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை, பொத்துவில், சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய இடங்களிலிருந்து துறைசார் நிபுணர்களும் புத்திஜீவிகளும் இந்த செயலமர்வில் கலந்து, தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

அமைச்சர் இங்கு உரையாற்றிய போது கூறியதாவது, தலைமைத்துவத்தைப் பாதுகாக்க எமக்கு ஒரு கட்சி தேவையில்லை சமுதாயத்தைப் பாதுகாக்கவே நமக்கு ஒரு கட்சி தேவைப்படுகின்றது.

கட்சித் தலைமையின் பிழையான முடிவுகளை தொட்டுக்காட்டினால் துரோகிகளாக தூக்கி எறியும் சாபக்கேடு இன்னும் தொடர்கிறது. பேரியலில் ஆரம்பித்து ஹசனலி வரை இன்று வந்து நிற்கின்றது. அம்பாறை முஸ்லிம்கள் வாக்குகளை அள்ளிச்சொரிந்ததன் மூலம் பெற்றுக்கொடுத்த அரசியல் அதிகாரம் முஸ்லிம் சமூகத்துக்கு இற்றைவரை எந்தப்பயனையும் வழங்கவில்லை. மர்ஹூம் அஷ்ரபின் பாடல்களைப் போட்டுக் காட்டியும் கட்சியின் சின்னத்தை காட்டி மக்களை ஒரு மாயைக்குள் தள்ளி பெற்றுக்கொண்ட அதிகாரங்களால் அவர்கள் அம்பாறை மாவட்ட மக்களுக்கு இற்றைவரை எத்தகைய நன்மைகளை புரிந்திருக்கின்றார்கள் என உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்டுப்பாருங்கள்.

கிழக்கில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளிலே மலசலகூடச் சுவர் கரும்பலகையாகவும் மரநிழல் பாடசாலைக் கூரையாகவும் இன்னும் இருக்கின்றனவே. தேர்தல் காலங்களில் உங்களை மயக்கி வாக்குகளைப் பெற்றுக்கொண்டு தமது காரியங்களை கச்சிதமாக முடிக்கின்றனரே. தலைகளை எண்ணி-எண்ணி அரச இயந்திரத்துக்கு அதனைக் காட்டி மொத்த

நாங்கள் புதுக்கட்சி ஆரம்பித்தோம்.எமது கட்சியின் யாப்பில் தலைமைத்துவத்தின் ஆதிக்கத்தை மனம்போன போக்கில் கட்சிக்குள் சர்வாதிகாரமாக செலுத்த முடியாது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இறைவனுக்கு பொருத்தமாக நேரிய பாதையில் சமூகத்தை நோக்கிய பயணத்தில் தடம் பதித்து வருகின்றது. அரசியல் அமைப்பு மாற்றம், தேர்தல் முறை மாற்றம், எல்லை நிர்ணயம் ஆகிய அரசியல் மாற்றங்களில் கட்சிக்கென தெளிவான பாதையை வகுத்துள்ளோம்.

எல்லை மீள் நிர்ணய வர்த்தமானி அறிவித்தல் எமக்கு பாதிப்பை ஏற்படுத்துவதால் உச்ச நீதி மன்றத்தின் துணையை நாம் நாடவுள்ளோம். அதே போன்று சமூகப்பிரச்சினைகளை கையாள்வதிலும் சமூகத்தின்தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் எமக்கு தெளிவான பார்வையும் திட்டங்களும் உள்ளன. புத்திஜீவிகளான நீங்கள் அரசியலில் நாட்டம்காட்ட சில வேளை விருப்பம் காட்டாவிட்டாலும் இருந்தாலும் எமது கட்சியை வழிநடத்துவதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் உங்களுக்கு பூரணமான உரிமையுண்டு என்பதை நான் பகிரங்கமாக கூற விரும்புகின்றேன்.

பியகம பகுதியில் தகுதியற்ற போலி டாக்டர்கள்;

## மக்கள் அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள்

(மினுவாங்கொடை நிருபர் )

இலங்கையில், கம்பஹா மாவட்ட பியகம தேர்தல் தொகுதியிலேயே ஆகக் கூடுதலான தகுதியற்ற போலி டாக்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இத்தொகுதியில் மாத்திரம், சுமார் 700 முதல் 800 வரையிலான போலி டாக்டர்கள் சேவையில் ஈடுபட்டு வருவது தெரியவந்துள்ளதாகவும், பியகம சுகாதார மருத்துவ அதிகாரி குமாரி விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

டெங்கு அதிகமாகத் தொற்றியுள்ள பிரதேசமாக பியகம அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இவ்வாறான போலி டாக்டர்களின் செயற்பாடுகளினால், நோய்கள் தீவிரமடைந்து, இப்பிரதேசத்திலுள்ள இரண்டரை இலட்சம் மக்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாட்டிலுள்ள ஆயுள்வேத வைத்தியர்கள், எந்தவித ஆங்கில மருத்துவ அறிவும் இல்லாமல், ஆங்கில மருத்துவ சிகிச்சை வழங்குவதில், நோயாளிகள் தங்களது நோய்களைக் குணப்படுத்த முடியாமல் சங்கடத்திற்குள்ளாகி வருவதாக, மினுவாங்கொடையை தலைமையகமாகக் கொண்டு இயங்கும், கொலேஜ் ஒப் ஹெல்த் சயன்ஸ் மருத்துவக் கல்லூரியின் பணிப்பாளர் டாக்டர் எம்.எச்.எம். முனாஸிக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான ஆயுர்வேத வைத்தியர்கள், ஆங்கில மருந்து கொடுப்பதற்குத் தகுதியற்றவர்கள் என்பதை, மக்கள் அறியாமல் இருப்பதனால்தான், இத்தகைய நிலைமை ஏற்படுவதாகவும் டாக்டர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே, ஒவ்வொரு கிராம மக்களும் இவ்வாறானவர்களை இனங்காண முன்வர வேண்டும் என்றும், இதனை, கிராம சேவகர் ஊடாக பிரதேச சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், டாக்டர் எம்.எச்.எம். முனாஸிக் பொது மக்களை வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

## மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் கையளிப்பு



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாண முதலமைச்சரின நிதி ஒதுக்கீட்டில் ஏறாவூர் வாவி மீனவர் சமூக மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

மீனவர்களுக்கான வாழ்வாதார உதவியாக 10 வாவி மீன்பிடித் தோணிகளும், 61 வலைகளும் 27 மீனவக் குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்க மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராஜசிங்கம், மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் உட்பட அமைச்சு அதிகாரிகள், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள், பயனாளிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உண்ணாவிரத போரட்டம்

(திருகோணமலை ஏ.எஸ். யாசீம்)

தமிழ் தாயகத்தின் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட உறவுகளைத்தேடும் சங்கத்தினர் நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் சுழற்சி முறையான உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்றுக்காலை உவர்மலையிலுள்ள விநாயகர் ஆலயத்தில் கடத்தப்பட்டவரின் உறவினர்கள் சமய வழிபாட்டில் ஈடுபட்டதுடன் அவ்வழியாக பதாகைகளை ஏந்தியவாறு ஆளுநர் அலுவலகத்தை வந்தடைந்தனர்.

இதில் கையளிக்கப்பட்டு,கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட உறவுகளின் முடிவுகளை உடனடியாக தெரியப்படுத்துமாறும் அரசியல் கைதிகள் விடுதலை





செய்யப்பட வேண்டும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கைகளை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக திருகோணமலை அமைப்பின் தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார்.

## துந்துவை கிராமத்துக்கு குழாயில் நீர் வசதி

காலி மாவட்டத்தில் நீண்டகாலமாக குடிநீர் வசதியின்றிக் காணப்படும் துந்துவை கிராமத்துக்கு குழாய் நீர் வழங்குவதற்கு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கை எடுத்துள்ளார். முஸ்லிம் காங்கிரஸ் காலி மாவட்ட மத்திய குழுவினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துந்துவை கிராமத்தை உள்ளடக்கியவாறு, அதற்கப்பால் அமைந்துள்ள பெரும்பான்மை சமூகத்தவர்கள் வாழும் மாகல, தொடகணத்த வரையில் குழாய் மூலம் நீர் விநியோகிக்க முடியுமான விதத்தில், பெந்தொட்டை ஆராச்சிமுல்ல சந்தியிலிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு மீளிணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது நடைமுறையிலுள்ள பெந்தொட்டை நீர் விநியோகத் திட்டத்தில் துந்துவை பிரதேசம் உள்வாங்கப்படவில்லை. இதனால், துந்துவை கிராமத்துக்கு குடிநீர் வசதியை வழங்கும் வகையில் பெந்தொட்டை ஆராச்சிமுல்ல சந்தியிலிருந்து தெத்துவ, ஹபுருகல, கொட்டன்ஹன சந்தி, துந்ர்வை, மாகல மற்றும் தொட்டகனத்த வரையில் சுமார் 53 மில்லியன் ரூபா செலவில் நீர் விநியோகம் மீளிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## உம்றா நிறைவேற்றச் சென்ற யாத்திரிகர் மரணம்

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

புனித உம்றாக் கடமையை நிறைவேற்றுவதற்காக கிழக்கு மாகாணம் அட்டாளைச் சேனையிலிருந்து சவூதி அரேபியா புனித மக்கா நகருக்குச் சென்ற யாத்திரிகர் கடந்த செவ்வாய்க்கிழமை வழிபாட்டின்போது மரணமானதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

அட்டாளைச்சேனை 4ஆம் பிரிவைச் சேர்ந்த இப்றாலெப்பை மீராலெப்பை என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். அங்கிருந்து புனித மக்கா யாத்திரை சென்ற 23 பேர் அடங்கிய குழுவிலே இவரும் ஒருவராக இருந்தார்.

இந்த யாத்திரிகர் மீக்காத் என்கின்ற இடத்திலே இஹ்றாம் எனும் புனித ஆடை தரித்து 7 முறை கஃபத்துல்லாவை வலம் வந்து மக்காமுன் இப்றாஹீம் என்கின்ற இடத்திலே தொழுகைக்காக நின்றிருந்தபோது திடீரென சரிந்து மூர்ச்சையாகி பின்னர் அவ்விடத்திலேயே மரணித்து விட்டதாக அவருடன் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த சக யாத்திரிகர் தெரிவித்தார். அவரது ஜனாஸா புனித மக்கா நகரிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.







சட்ட வாரத்தினை முன்னிட்டு அதனை சிறப்பிக்கும் முகமாக பொதுமக்களுக்கு தகவல் அறியும் சட்டம் சம்பந்தமான விழிப்பூட்டல் கருத்தரங்கு அக்கரைப்பற்று சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆலோசகரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஏ.ஜே.எம்.நாஜிம் தலைமையில் சுவாட் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம்.பஹ்ஜி விரிவுரையாளராக கலந்து கொண்டு தகவல் அறியும் சட்டம் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு விளக்கி வைத்தார். இதன்போது பிடிக்கப்பட்ட படங்களைக் காணலாம். (படங்கள் - எம்.ஜே.எம். சஜீத்)

# முஸ்லிம்களின் காணிப்பிரச்சினைகளுக்கு ரவூப் ஹக்கீம் உடனடித் தீர்வு



நவாஸ் சௌபி

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள் எதிர் கொள்ளும் காணி மற்றும் மீள் குடியேற்றப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் உயர்மட்ட அதிகாரிகள் சந்திப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கடந்த பெப்ரவரி 23 ஆம் திகதி பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பாக காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி மற்றும் மனித எழுச்சி நிறுவனமும் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களை கடந்த 2017.01.29 ஆம் திகதி நீர்வழங்கல் அமைச்சின் அம்பாறை மாவட்டக் காரியாலயத்தில் சந்தித்து விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலும், அதனைத் தொடர்ந்து இவ் அமைப்புகள் 2017.02.19 இல் அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் ஏற்பாடு செய்த இக்காணிப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் கூட்டத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டு பேசுகையில் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலும் மேற்படி பாராளுமன்ற கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்,திணைக்களத் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை எமது நாட்டின் அரசியல் உயர் பீடமான பாராளுமன்றத்திற்கு அழைத்து மிகக் கவனமாக இப்பிரச்சினைகளை எந்தவிதமான நழுவல்களும் இல்லாமல் முன்வைத்து இறுக்கமான தீர்வுகளை உடனடியாகப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தலைவர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தினாலும் பேரினவாத செயற்பாடுகளினாலும் அபகரிக்கப்பட்ட காணிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறுவதில் இப்படி நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் அரசியல் தீர்வு நடவடிக்கையை முன்னெடுத்ததில் தலைவர் ரவூப் ஹக்கீம் அதனோடு சேர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரமுகர்கள் என அனைவரும் நன்றிக்குரியவர்கள் என்று மேற்படி அமைப்புக்கள் பாராட்டுத் தெரிவித்திருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த சுமார் 3000 குடும்பங்கள்இவ்வாறான காணி இழப்புகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இப்பிரச்சினைகள் யாவும் பொத்துவில், லாஹுகல, அக்கரைப்பற்று, ஆலயடிவேம்பு, அட்டாளைச்சேனை, ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வருகின்ற வேகமாம், பாலயடி வட்டை, கிரான்கோமாரி, அஷ்ரஃப் நகர்(ஆலிம்சேனை), பொன்னன்வெளி, அம்பலத்தாறு, கீத்துப்பத்து ஆகிய காணிகள் மற்றும் குடியிருப்புக்களை மையமாகக் கொண்டவைகளாகும்.

இதில், மிக முக்கியமாக பாரம்பரியமாக பயிர் செய்யப்பட்டு வந்த காணிகள் வனஜீவராசிகள்,வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம், தொல்பொருட் திணைக்களம் மற்றும் புனித பூமித் திட்டம் போன்றவற்றினால் சுவீகரிக்கப்பட்டவைகளாக இருப்பது இதற்கான தீர்வுகளைப் பெறுவதில் பெரும் தடையாக இருக்கின்றது.

மேற்படி,இடங்களில் உள்ள பிரச்சினைகள் யாவும் மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு முன்வைக்கும் வாயப்பு இச் சந்திப்பில் ஏற்படுத்தப்பட்டது இதில் கிடைத்த முதலாவது வெற்றியாகும். மேலும் குறிப்பிட்ட பிரச்சினைகளால்உரிய மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடிந்ததும் இச் சந்திப்பு ஏற்படுத்திய மற்றுமொரு மகத்தான தருணமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஆராயப்பட்ட பிரச்சினைகளும் அவை குறித்து எடுக்கப்பட்ட தீர்வுகளும் வருமாறு.

**பிரச்சினையான இடம் : வேகாமம்**

இது பொத்துவில், லாஹுக்கல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட காணிகளாகும். இவை 55 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வந்த 450 ஏக்கர் காணிகளை உள்ளடக்கியது.

**பிரச்சினை**

குறிப்பிட்ட காணிகளில் 1990 களின் பின்னர் யுத்த காரணங்களினால் அம்மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

பின்னர், இக்காணிகள் 2006 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் எந்தவித முறைமையுமின்றி வன விலங்கு பரிபாலன திணைக்களத்தின் எல்லைக்குள் சேர்கப்பட்டிருக்கிறது.

இதனால் 140 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

**பெறப்பட்ட தீர்வு**

மேற்படி பிரச்சினையை உரிய பிரதேச செயலாளர்கள் மட்டத்தில் தீர்ப்பதற்கு உத்தரவிடப்பட்டதோடு, இதில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தேவை ஏற்படின், உரிய பிரதேச செயலாளர்களின் கீழ் அறிக்கை ஒன்றினை தயாரித்து வழங்குமாறும் வேண்டப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் அடிப்படையில் தலைவர் ரவூப் ஹக்கீம் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு தீர்வுக்கான உத்தரவுகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

பிரச்சினையான இடம் : பாலையடி வட்டை

இது பொத்துவில் லாஹுக்கல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட காணிகளாகும். இவை 21 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வந்த 503 ஏக்கர் காணிகளை உள்ளடக்கியது.

**பிரச்சினை**

மேற்படி காணிகளுக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் 2000 ஏக்கர் காட்டுப் பரப்பு அழிக்கப்பட்டு அது பெரும்பான்மை மக்களுக்கு உரித்தாக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி காடுகள் இவ்வாறு அழிக்கப்பட்டு கொடுக்கப்பட்டதனால் அந்தவழியாக சென்று வந்த யானைகளுக்கு மாற்று வழிப் பாதையாகபாலையடி வட்டை காணிகளை விடுமாறு வனஜீவராசிகள், வன பரிபாலன திணைக்களம் உத்தரவிட்டு குறிப்பிட்ட காணிகளில் விவசாயம் செய்யவிடாது தடுத்தும் வைத்திருக்கிறது. இதனால் 250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

**பெறப்பட்ட தீர்வு**

இப் பிரச்சினைக்கு அழிக்கப்பட்ட காட்டுப் பிரதேசத்தோடு சேர்த்து யானை வழியை சிறிய பகுதியாகச் சுருக்கி கொடுத்துவிட்டு,உரிய காணிகளை மக்களின் பயிச்செய்கை பயன்பாட்டிற்கு கொடுப்பதற்கு உரிய பிரதேச செயலாளர்கள் ஊடாக வனஜீவராசிகள், வன பரிபாலன திணைக்கள அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரச்சினையான இடம் : கிரான் கோமாரி

இது பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட காணியாகும். இவை 59 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வந்த 885 ஏக்கர் காணிகளை உள்ளடக்கியது. அம்பாறை மாவட்டம் உருவாவதற்கு முன்பு 1957 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கச்சேரியால் இதற்கான பேமிட் வழங்கப்பட்டிருக்கிறது.

**பிரச்சினை**

மேற்படி 885 காணியில் 185 ஏக்கர் காணிகள் நீங்கலாக ஏனையவை அரசாங்கத்தினால் எந்தவித முறைமையுமின்றி வன விலங்கு பரிபாலன திணைக்களத்தின் எல்லைக்குள் சேர்க்கப்பட்டிருப்பதோடு குறிப்பிட்ட காணியில் விவசாயம் செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பினரும் தடை விதித்துவருகின்றனர்.

இதனால் 177 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**பெறப்பட்ட தீர்வு**

குறிப்பிட்ட காணியின் பரப்பினை விரிவான நில அளவை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இது காணி உரிமையாளர்களின் முன்னிலையில் நடக்க வேண்டும் எனவும் உறுதியாக்கப்பட்டுள்ளது.

இக்காணிகளை விரிவான நிலஅளவை செய்வதற்கான செலவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொறுப்பேற்றிருக்கிறார்.

இதன் மூலம் 885 ஏக்கர் காணிகளுக்குமான பேமிட் அனுமதிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அக் காணிகள் பாதிக்கப்பட்டவர்களின் பயன்பாட்டிற்கு கொடுக்கப்படும்.

பிரச்சினையான இடம் : அம்பலத்தாறு மற்றும் கீத்துப் பத்து

இதில் அம்பலத்தாறு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் கீத்துப் பத்து ஆலயடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் காணப்படுகின்ற காணிகளாகும். இதனுள் பள்ளச்சேனை, சோலைவட்டை, சியாத்துற வெளி,பாவா புரம் போன்ற இன்னும் சில சிறுபகுதிக் காணிகளும் உள்ளடங்குகின்றன. இவை 79 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களாகும்.

**பிரச்சினை**

மேற்படி காணிகளில் முதலில் அம்பலத்தாறு பகுதிக் காணிகளை அரசாங்கம் எந்தவித முறைமைகளுமின்றி பறிமுதல் செய்து கல்ஓயா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 18ஏ, 19ஏ கொலனிகளை உருவாக்கி பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்க உள்ளது.

அவ்வாறு 18ஏ, 19ஏ கொலனிகளில் குடியேறிய பெரும்பான்மை சமூக மக்களால் பின்னர் கீத்துப் பத்து காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட அம்பலத்தாறு மற்றும் கீத்துப் பத்து காணிகளுக்கு நஷ்ட ஈடாக பதில் காணிகள் கொடுக்கப்படாமல் இதுவரை 48 குடும்பங்கள் இருக்கின்றன.

**பெறப்பட்ட தீர்வு**

மேற்படி விடயத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய தீர்வினைப் உடனே பெற்றுக் கொடுப்பதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப்பேற்றுக்கொண்டார். அந்த இடத்தில் உரிய தீர்வு காணப்பட்ட ஒரு விடயமாக இது இருந்தது. இதனை நடைமுறைப்படுத்தவும் அறிக்கை தயாரிக்கவும் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலயடி வேம்பு, இறக்காமம் மற்றும் தவண பிரதேச செயலாளர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பிரச்சினையான இடம் : பொன்னன் வெளி, அஷ்ரஃப் நகர்

இவை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காணிகயாகும். இவை 50 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களாகும். 600 ஏக்கர் காணிகள் இதனுள் அடங்குகிறது.

**பிரச்சினை**

இதில் அஷ்ரஃப் நகர் காணிகள் அரச படை, புனித பூமி, தொல்பொருள் வன பரிபாலன இலாகா ஆகிய திட்டங்களுள் பலவந்தமாக பறிக்கப்பட்டிருக்கிறது.

இது நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் மேற்படி எல்லைகளுக்குள் இருந்து விடுவிக்கப்பட்டு உரியவர்களின் பாவனைக்குரியதாக வழங்கப்பட்ட போதும் மீண்டும் இத் தீர்ப்புக்கு எதிரான தடை உத்தரவு வழக்கினை வன பரிபாலன திணைக்களம் போட்டிருக்கிறது.

அடுத்து பொன்னன் வெளிக் காணியில் ஏற்கனவே முஸ்லிம்கள் வைத்திருக்கும் அதே பேமிட் காணிகளுக்கு முறைகேடாக இரண்டாம்தர பேமிட்டுகள்பெரும்பான்மை மக்கள்102 பேருக்கு அத்துமீறியதாக வழங்கப்பட்டிருக்கிறது.

இதனால் 176 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**பெறப்பட்ட தீர்வு**

மேற்படி விடயத்தில் அஷ்ரஃப் நகர் காணிகளுக்கு எதிராக வனபரிபாலன திணைக்களத்தினால் மீண்டும் போடப்பட்ட வழக்கினை வாபஸ் வாங்குவதாகவும், ஏற்கனவே உள்ள நீதி மன்றத் தீர்ப்பின் பிரகாரம் உரிய காணிகளை அம்மக்களின் பயன்பாட்டிற்கு விடுவதாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக பொன்னன் வெளி காணியில் புதிதாக கொடுக்கப்பட்ட 102 பெரும்பான்மை மக்களுக்கான பேமிட் காணிகளை அவ்வாறே வைத்துக்கொண்டாவது உரித்துடையவர்களுக்கு அருகிலுள்ள மீதிக் காணியில் அளவீடு செய்து மாற்றுக் காணிகளை கொடுப்பதற்கும் முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றது.

இவ்விடயங்களை முன்னெடுப்பதற்கும் இதற்கான நிலைமைகளை அறிக்கை செய்வதற்கும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறார்.

**கலந்துகொண்டவர்கள்**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துஷித பி. வனிகசிங்க, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசநாயக்க, காணி ஆணையாளர் இந்திக விஜயகுணவர்தன,வன ஜீவராசிகள் வனபரிபாலனத் திணைக்களங்களின் அதிகாரிகள், பொத்துவில், அக்கரைப்பற்று, ஆலயடி வேம்பு, அட்டாளைச்சேனை, திருக்கோவில், இறக்காமம் ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் என அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.

இவர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர், எம்.எஸ்.தௌபீக், அலிசாஹிர் மௌலானா, எம்.எச்.எம்.சல்மான் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர், கிழக்கு மாகாண காணி அமைச்சர் ஆரியவதி கலபதி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல்.தவம், ஆரிப் சம்சுதீன், ஷிப்லி பாரூக், ஆர்.எம். அன்வர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் மன்சூர் ஏ. காதர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இத்துடன், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாயிகளை பிரதிநிதித்துவப்படுத்தி காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியினர், மனித எழுச்சி நிறுவனத்தினர் போன்ற அமைப்பினரும் இதில் கலந்து கொண்டனர்.

**தொடர் முடிவுகள்**

மேற்படி கலந்தரையாடப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி அவற்றினை உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கும் அதற்கான இணைப்புகளைச் செய்வதற்கும் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது பிரதி நிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர்,எம்.எஸ்.தௌபீக் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் ஆகிய மூன்று பேரையும் நியமித்திருக்கிறார்.

மேலும் கிழக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்டுவதற்கான இதுபோன்ற கலந்துரையாடல்களை எதிர்காலத்தில் ஏற்பாடு செய்வதாகவும் தலைவர் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டிருக்கிறார்.

---

# நீதி தொடர்பாக மீள் வரைவிலக்கணம் செய்தல்

சூரி ரத்னபால

***(கடந்தவார தொடர்ச்சி...)***

சுதந்திரம் தொடர்பான எண்ணக்கருவினைத் திருத்தியமைத்தலுடன் மிக நெருக்கமாக நீதி எனும் எண்ணக்கருவின் விரிவாக்கம் இணைந்துள்ளது. நியாயமான நடத்தையின் பொதுவிதிகளை அவதானித்தல் எனும் நீதி பற்றிய பழமைவாய்ந்த சிந்தனையானது சமூக உற்பத்தியின் நியாயமான பகிர்ந்தளிப்பு எனும் நியமத்தை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. வறுமை பற்றிய உருவாக்கத்திலும் தனிநபர் அல்லது குழு பொறுப்பாக இல்லாதபோதிலும் கூட அது துர்அதிர்ஸ்டமாக அன்றி நியாயமற்ற நிபந்தனையாகக் கருதப்படுகிறது. மாக்ஸிச வாதத்தின் சோசலிச தத்துவத்தில், நியாயமான பகிர்ந்தளிப்பு என்பது, 'ஒருவரது தேவைக்கேற்ப ஒவ்வொருவருக்கும்', ஒருவரது வருமானத்திற்கேற்ப ஒவ்வொருவரிடமிருந்தும் எனும் பண்ட சமத்துவ அடிப்படையிலான தத்துவத்தின் நிபந்தனையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது. சமூக சனநாயகவாதிகள் இந்த இலட்சியத்திற்குப் பங்களிப்புச் செய்தபோதிலும், பண்ட சமத்துவமின்மையை சீர்செய்வதை இலக்காகக் கொண்ட தொடரற்ற பொருளாதார தொடர்புகளின் சீராக்கல்களினால் உந்தப்பட்டனர். நியாயமான ஒதுக்கீடுகளை எய்துவதற்கான இலக்கானது, 'தந்திர அரசியலமைப்பில் பாரிய பிரச்சினையைத்

தோற்றுவித்த 'சமூக நீதி' எனும் சொல்லின் பிரயோகத்தையும் உள்ளடக்கியது.

பழையகாலம் முதலிருந்தான தத்துவஞானிகள் நியாயமான பண்டப்பகிர்ந்தளிப்பு உறுதிசெய்யப்படுவதின் புறவய நோக்கம் தொடர்பான வழிமுறைகளில் வெற்றிபெறவில்லை. 'தேவைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் மற்றும் அந்நபரின் வருமானங்களுக்கிணங்க ஒவ்வொருவரிடமிருந்தும்' எனும் தத்துவம் எண்ணிலடங்காத ஆட்களின் தேவைகள் மற்றும் வருமானங்கள் ஆகியவற்றின் மிக அகவயம் சார்ந்த தீர்மானங்களை கோருகிறது. பொருளாதார சமவலுவின்மையை குறைப்பதற்கான மிக நியாயமான சமூக சனநாயக இலக்கைப் பொறுத்த வரையிலும் கூட உயர்மட்ட தற்துணிவு மற்றும் தன்விருப்பப்படியான (எழுந்தமான) அரசாங்கம் என்பது தேவைப்படுகிறது. பொதுச் சட்டங்களால் விசேட பௌதீக நிபந்தனைகளை உருவாக்க அல்லது பேணுவதற்கு முடியாது. சட்ட சகல ஆட்களினதும் செல்வத்தை சமநிலைப்படுத்துவதில் வெற்றிபெற்றிருப்பினும் கூட தற்துணிவுத் தத்துவத்தின் மூலம் செல்வங்களின் பகிர்ந்தளிப்பின் தொடர்ச்சியான நுண்சீராக்கல்கள் தவிர அத்தகைய சமத்துவம் பேணப்பட முடிந்திருக்கவில்லை. எல்லோரும் சமம் மற்றும் சமஉரிமை உடையவர்கள் எனும் நம்பிக்கையினடிப்படையிலான இலட்சியம் குறித்த விடயத்தில் அதிகாரிகளின் தவிர்க்க முடியாத எழுந்தமான அமுல்படுத்துகையுடன் பொதுவிதிகள் மாற்றியமைக்கபடுவதனால் சட்ட ஆட்சி பற்றிய நம்பிக்கையை அழித்துவிடுகிறது. இது 'தந்திர அரசியலமைப்பின் முக்கிய பகுதியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இங்கே கலந்துரையாடலில் உள்ள சமூக நீதியின் சிறப்பானது சமூகப் பாதுகாப்பைப் போன்றது அல்ல. சமூகப் பாதுகாப்பு என்பது சகல ஆட்களுக்குமென உத்தரவாதமளிக்கப்பட்ட ஆகக்குறைந்த வருமான வடிவிலமைந்த வருமானப் பாதுகாப்பு வலையமைப்பினால் வழங்கப்படுகிறது. சமூகப் பாதுகாப்பு எனும் இந்த அர்த்தத்தில், தற்துணிவுடனான வருமானச் சீராக்கல் தேவைப்படாதபோதும் செல்வத்தை மீளப் பகிர்ந்தளிப்புச் செய்யும் வழிமுறையிலும் பார்க்க உலகளாவிய காப்புறுதி வடிவில் புரிவதாயின், மரபு ரீதியான பொருள்பட சட்ட ஆட்சியுடன் பொருத்தப்பாடுடையது. உண்மையில், மரபு ரீதியான தாராளமயச் சிந்தனையாளர்கள் உலகளாவிய பாதுகாப்பு வலையமைப்பில் நீங்கற்ற அதிகளவு நன்மைகளை நோக்குகின்றனர்.

கைத்தொழில் மயமாக்கப்பட்ட சனநாயகத்தில், அரசியலமைப்பு அரசாங்கம் தொடர்பான முதலாவது நிபந்தனையாகிய அரசியலமைப்பு அரசாங்கத்தைப் பேணுவதற்குரிய உடனடிப்பொறுப்புடைய சனசமூகத்தில் மரபுரீதியான பொருள்பட அரசியலமைப்பு வாதம் பற்றிய புரிந்துணர்வின் நிலவுகை பாரதூரமாக அழிவடைந்துள்ளது. இத்தகைய நாடுகளில் அரசியலமைப்பு முறைமைகள் மீது அமுல்படுத்தப்பட்டுள்ள தன்னியக்க நாகரிக ஒழுங்கு மற்றும் சிறுபான்மைப் புலமையாளர்களின் துணிச்சல் மிக்க முயற்சிகள் ஆகியன திருத்தியமைக்கப்பட்டு பொறுப்புகளை வழங்கும் இத்தகைய நாடுகளில் அரசியலமைப்பு அரசாங்கம் ஒப்பீட்டளவில் ஆரோக்கியமாக உள்ளது என்பது உண்மையாகும்.

அரசியலமைப்பு அரசாங்கத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அரசியலமைப்பு

ஏனைய சட்டங்களுக்கு அப்பாற்பட்ட முக்கிய அதிகாரத்தையுடைய எழுத்து மூலமான அரசியலமைப்பு ஆவணங்களையுடைய நாடுகளிலும் கூட உத்தியோகபூர்வ அரசியலமைப்பு ஒன்றை உறுதிசெய்வது இலகுவானதல்ல. எழுத்து மூலமான அரசியலமைப்பு தனக்கென நீடித்த காலத்தைக் கொண்டிருப்பதில்லை. அதன் சொற்களுக்கு கண்கட்டிவித்தைக்குரிய தரம் கிடையாது. அரசாங்கம் மற்றும் அதன் பல உருவாக்கங்களை மேற்கொள்ளும் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டுள்ள, குறித்துரைக்கப்பட்டுள்ள, அவதானிக்கப்பட்டுள்ள மற்றும் வலுவூட்டப்பட்டுள்ள வழிமுறைகளிலிருந்து அது பொருளை (கருத்தை)ப் பெற்றுக்கொள்கிறது. அதே உரைப்பகுதி எழுந்தமான விதி தொடர்பில் வசதியளிப்பதற்கு அல்லது அதை தடைப்படுத்துவதற்கு குறித்துரைக்கப்படலாம்.

**(தொடரும்)**

# உலகச் செய்திகள்

## வறட்சியின் கோர பிடிக்குள் சோமாலியா:

# 48 மணிநேரத்தில் 110 பேர் பட்டினிச் சாவு







சோமாலியாவில் கடும் பஞ்சம் நிலவிவரும் நிலையில், கடந்த 48 மணிநேரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மட்டும் பட்டினியால் 110 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஹசன் அலி ஹைரே தெரிவித்துள்ளார்.

சோமாலியாவில் தொடரும் கடும் வறட்சியால் குடிநீர் மற்றும் உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அங்கு வாழும் 30 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சோமாலியாவின் தென் மேற்கு வளைகுடா பகுதியில் மட்டும் 48 மணி நேரத்தில் 110 பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளனர்.

அங்குள்ள அவ்டின்லே நகரில் ஏராளமானவர்கள் கொத்து கொத்தாக செத்து மடிந்துள்ளனர். அங்கு சுத்தமான குடிநீர் கிடைக்கவில்லை. அதனால் அங்கு கொலரா நோய் பரவி வருகிறது.

இந்த பட்டினி சாவு ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மட்டும் வெளியாகி உள்ளது. இதுபோன்று நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் உணவின்றி உயிரிழக்கின்றனர்.

எனவே வறட்சி பாதித்த பேரழிவு நாடு சோமாலிய என ஜனாதிபதி முஹம்மது அப்துல்லாகி முஹம்மது அறிவித்துள்ளார்.

உதவி செய்யும்படி அமெரிக்காவில் உள்ள முன்னணி 13 அறக்கட்டளை நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சோமாலியா அடிக்கடி வறட்சியால் பாதிக்கப்படுகிறது. இங்கு 1992ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் வறட்சி காரணமாக உணவின்றி உயிரிழந்தனர். அதே போன்று 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலும் 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் பட்டினியால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மொசூல் நகரில் ஐ.எஸ். இரசாயன குண்டு வீச்சு

## குழந்தைகள் உட்பட 12 பேர் காயம்







ஈராக்கின் மொசூல் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இரசாயன குண்டு வீச்சில் 12 பேர் காயம் அடைந்தனர்.

மறைமுகமாக இரசாயன குண்டுகளை தயாரித்து வந்த ஐ.எஸ். தீவிரவாதிகள், அதை முதன் முறையாக மொசூலில் பயன்படுத்தியுள்ளனர்.

ஈராக்கின் மிகப் பெரிய 2ஆவது நகரமான மொசூல் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசம் இருந்தது. அதை மீட்க ஈராக் இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது. இதற்கு அமெரிக்க கூட்டு படைகளும் உதவின.

மொசூல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் முழுவதும் மீட்கப்பட்டு இராணுவ வசமாகியுள்ளது. தங்களது தோல்வியை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலைவர் அபுபகர் அல்-பக்தாதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இத்தாக்குதல் நடந்த போது மொசூல் பகுதியில் ரசாயன குண்டுகள் சரமாரியாக வீசப்பட்டது. இதில் 12 பேர் காயம் அடைந்தனர்.

மொசூல் அருகேயுள்ள இர்பில் நகரை சேர்ந்தவர்கள். அவர்களில் 11 வயது சிறுவன் கடுமையான மூச்சு திணறல், தோல் நோய் பாதிப்பில் அவதிப்பட்டு இருக்கிறான். காயம் அடைந்தவர்களை பரிசோதித்த போது இரசாயன குண்டு வீச்சு நடந்தது உறுதி செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவை சங்க மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் யார் ஈடுபட்டது என அறிவிக்கப்படவில்லை. ஆனால், ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என ஈராக் மற்றும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன குண்டுகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் மறைமுகமாக தயாரித்து வந்தனர். அதை முதன் முறையாக மொசூலில் பயன்படுத்தியுள்ளனர்.

# ஐ.எஸ். - ரஷ்ய ஆதரவுப் படை மோதல்;

## சிரியாவில் 65 ஆயிரம் பேர் வெளியேற்றம்



சிரியாவின் வடக்குப் பகுதியில் கடந்த ஒருவாரமாக ரஷ்ய ஆதரவுப் படைகளுக்கும், ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கிடையிலான மோதல் காரணமாக சுமார் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடிமக்கள் வெளியேறியுள்ளனர்.

இதுகுறித்து சிரிய மனித உரிமை ஆணையம் வெளியிட்ட செய்தியில், சிரியாவில் ஐ.எஸ். இயக்கத்தை அழிக்க ரஷ்ய ஆதரவுப் படைகள் கடந்த ஒருவாரமாக கடுமையான மோதலில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஐ.எஸ். கட்டுப்பாட்டிலிருந்து சுமார் 65 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடிமக்கள் வெளியேறியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர், சிறுமிகள் மற்றும் பெண்கள் ஆவர்.

ஐ.எஸ். கட்டுப்பாட்டிலிருந்த முக்கிய நகரங்களை ரஷ்ய ஆதரவுப் படைகள் மீட்டுள்ளன. தொடர்ந்து ஐ.எஸ் கட்டுப்பாட்டு பகுதிகளில் மோதல் இடம்பெற்று வருகிறது. வெளியேறிய மக்கள் பலர் மன்பிஜ், அலெப்போ ஆகிய நகரங்களில் முகாமிட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

சிரியாவில் கிளர்ச்சியாளர்களுடனான மோதலில் அரசுப் படைகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அங்கு ஐ.எஸ். இயக்கத்தை அடியோடு அழிக்கும் முயற்சியில் சிரிய அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

# பிலிப்பைன்ஸ் நிலநடுக்கம்; ஒருவர் பலி: 50 பேர் காயம்

பிலிப்பைன்ஸின் தென் பகுதியில் நேற்று ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் எதிரொலியாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 50 பேர் படுகாயமடைந்துள்ளனர் என முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிலிப்பைன்ஸின் தென் பகுதியிலுள்ள மிண்டானாவோ தீவு கூட்டம் பகுதியில் (உள்ளூர் நேரப்படி) நேற்று காலை 6 மணியளவில் 6.9 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. எதிரொலியாக அடுத்தடுத்து நில அதிர்வுகளும் உணரப்பட்டுள்ளன.

# ஒட்டுக்கேட்டார் ஒபாமா

## டிரம்ப் குற்றச்சாட்டு ஒபாமா மறுப்பு



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது தனது தொலைபேசி உரையாடல் ஒட்டுக்கேட்கப்பட்டதாக ஜனாதிபதி டிரம்பின் குற்றச்சாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதி ஒபாமா மறுப்பு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. இதில் குடியரசுக் கட்சி சார்பில் தொழிலதிபரும் தற்போதைய ஜனாதிபதியுமான டொனால்ட் டிரம்ப் போட்டியிட்டார். இந்நிலையில் தான் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட, ஒக்டோபர் மாதத்தில் அப்போதைய ஒபாமா அரசால் தனது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டதாக டிரம்ப் குற்றம்சாட்டியிருந்தார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில், "ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு சற்றுமுன் தனது தொலைபேசி ஒட்டுக்கேட்கப்பட்டதுடன் முறைகேடாக பதிவும் செய்யப்பட்டது. இதற்கு அப்போதைய ஜனாதிபதி ஒபாமாவே காரணம்" என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டிரம்பின் குற்றச்சாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மறுப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ஒபாமாவின் செய்தித் தொடர்பாளர் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் சாதாரண அமெரிக்க குடிமகன் உட்பட யாருடைய தொலைபேசியும் ஒட்டுக்கேட்கப்பட வில்லை. இது தொடர்பாக ஒபாமா எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை எனக் தெரிவித்துள்ளார்.

# மத்தியதரைகடலில் படகு விபத்து 115 அகதிகள் மீட்பு; 25 பேர் மாயம்



அகதிகள் சென்ற படகு நடுக்கடலில் மூழ்கி விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து நடுக்கடலில் தத்தளித்த 115 பேரை லிபிய கடற்படையினர் மீட்டனர்.

இதுகுறித்து லிபிய கடற்படை செய்தித் தொடர்பாளர் அயூப் காஸிம் தெரிவித்ததாவது:

திரிபோலியின் தஜுரா மாவட்டத்திலிருந்து புகலிடம் தேடிச் சென்றவர்களின் படகு எதிர்பாராதவிதமாக மத்தியதரைக் கடல் பகுதியில் விபத்துக்குள்ளானது. அந்தப் படகில் மொத்தம் 140 பேர் இருந்ததாக கூறப்படுகிறது.

விபத்து குறித்த தகவல் அறிந்ததும் உடனடியாக அப்பகுதிக்குச் சென்ற லிபிய கடற்படையினர், கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 115 பேரை பத்திரமாக மீட்டனர். அவர்களில், ஆறு பெண்களும் அடங்குவர்.

மேலும், காணாமல் போன 25 பேர் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நடப்பாண்டில் இதுவரையில் மட்டும் அகதிகளாகச் சென்று நடுக் கடலில் படகு விபத்தில் சிக்கிய 2,000 பேரை கடற்படையினர் மீட்டுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகவும் அதிகமாகும் என்றார் அவர்.

# ஜோர்தானில் ஒரே நாளில் 15 பேருக்கு தூக்கு

ஜோர்தான் சிறையில் ஒரே நாளில் 15 கைதிகளுக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அந்நாட்டு அரசு செய்தி நிறுவனமான பெட்ரா இது தொடர்பாகத் தெரிவித்ததாவது: தலைநகர் அம்மானிலுள்ள சிறையில் சனிக்கிழமை அதிகாலையில் 15 கைதிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர்களில் 10 பேர் பயங்கரவாதக் குற்றம் புரிந்தவர்கள். மற்றவர்கள் பாலியல் பலாத்காரம், கொலை உள்ளிட்ட கொடுங் குற்றங்கள் புரிந்தவர்கள். ஒரே நேரத்தில் இத்தனை அதிகம் பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவது பல ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நிகழ்கிறது என்றார் அவர்.

ஜோர்தான் நீதிமன்றங்கள் மரண தண்டனைகள் விதித்து தீர்ப்பளித்து வந்த போதிலும், 2006ஆம் ஆண்டு முதல் 2014 வரை அவை நிறைவேற்றப்படாமல் இருந்தன. இந்த நிலையில், ஜோர்தான் விமானி ஐ.எஸ். தீவிரவாதிகளால் உயிருடன் எரிக்கப்பட்டார்.

இதையடுத்து, கொடுங்குற்றங்களுக்கு மரண தண்டனை நிறைவேற்ற அரசு முடிவு செய்தது. பயங்கரவாதக் குற்றத்துக்காக பெண் உட்பட இருவர் 2015-இல் தூக்கிலிடப்பட்டனர். தற்போது அந்நாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 94 பேர் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிரிய அரசுப் படை அதிரடி:

# ஐ.எஸ்ஸிடமிருந்து மீண்டது பல்மைரா



சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பல்மைரா நகரை ரஷ்ய விமானப் படை உதவியுடன் அரசு படையினர் மீட்டுள்ளனர். இதனால் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு மற்றொரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

சிரியாவில் ஐ.எஸ் தீவிரவாதிகள் தொடர்ந்து பயங்கர தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை ஒடுக்க அரசு படையினரும் போராடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு ரஷ்யாவும் உதவி வருகின்றது. இந் நிலையில், சிரியாவில் வரலாற்றுச் சிறப்புமிக்க பல்மைரா நகரை கடந்த 2015ஆம் ஆண்டு தீவிரவாதிகள் கைப்பற்றினர். அதன்பின் அங்கிருந்து புராதன பொருட்களை கொள்ளை அடித்தனர்.

சிரிய தலைநகர் டமஸ்கசிலிருந்து 210 கி.மீ. வடகிழக்காக அமைந்துள்ளது பல்மைரா நகர். இது ஹோம்ஸ் மாகாணத்துக்குள் அமைந்துள்ளது.

இந்நகர் பாலைவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நூற்றாண்டில் ரோமானியர்கள் கட்டியதாக வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன. மிகவும் பழமை வாய்ந்த இந்நகரை கலாசார மையமாக ஐக்கிய நாடுகள் சபையும் அறிவித்துள்ளது. இந்நகரில் ஏராளமான பழங்கால சிலைகள் இருந்தன. அவற்றில் பெரும்பாலானவற்றை ஐ.எஸ். தீவிரவாதிகள் அழித்து விட்டனர். அழகிய நகரமாக இருந்த பல்மைரா, ஐ.எஸ் தீவிரவாதிகளின் கைகளுக்குச் சென்ற பின் சின்னாபின்னமானது.

இந்நிலையில், ரஷ்யாவின் உதவியுடன் பல்மைரா நகரை மீட்க சிரிய அரசு படையினர் தொடர்ந்து தீவிரவாதிகளுடன் மோதி வந்தனர். கடந்த ஒரு வாரமாக பல்மைராவில் இருதரப்புக்கும் இடையில் தீவிர மோதல் நடைபெற்றது. அதன்பலனாக பல்மைரா நகரை அரசு படையினர் முழுவதுமாக நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர். இதற்கு ரஷ்ய ஜெட் விமானங்களிலிருந்து நடத்திய தாக்குதல் மிக முக்கியமாக இருந்துள்ளது.

பல்மைரா நகரம் மீட்கப்பட்டதை ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சர் செர்ஜி ஷோய்கு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் அதிகாரப் பூர்வமாக தெரிவித்துள்ளார். மேலும், சிரியாவில் மனித உரிமை கள் கண்காணிப்பு குழுவும் (இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள்) பல்மைரா நகர் முழுவதும் அரசுவசம் வந்து விட்டதை உறுதிப்படுத்தியுள்ளது.

மீட்கப்பட்ட பல்மைரா நகரில் தீவிரவாதிகள் புதைத்து வைத்துள்ள வெடிகுண்டுகளை அகற்றும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

## முஸ்லிம்களுடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்சிக்கு ஆதரவு வழங்கிய முஸ்லிம்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் முஸ்லிம் அலகாக இயங்கி வரும் முற்போக்கு முஸ்லிம் முன்னணியின் செயலாளர் ஏ.எச்.எம் அஸ்வர் அஸ்வர் தெரிவித்தார்.

மிக விரைவில் இதே போன்று தமிழர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெற ஏற்பாடுகள் மேற்கொண்டு வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## நிந்தவூரில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பதிலாக உங்கள் கோட்டையிலேயே தலைவர் ஹக்கீம் கூட்டம் நடாத்தினாரே என்று கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சனியன்று நடத்திய கூட்டம் அபிவிருத்தி தொடர்பான ஒரு கலந்துரையாடலே. அதில் கலந்துகொண்டோரில் கூடுதலானோர் வெளியூர்களில் இருந்து வந்தவர்களே என்றும் ஹசன் அலி தெரிவித்தார்.

ஹசன் அலியின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி பொத்துவிலில் நடாத்த திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## 90 கட்சிகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதி திகதி கடந்த 28 ஆம் திகதியுடன் முடிந்துள்ளது. புதிதாக விண்ணப்பித்துள்ள கட்சிகள் தொடர்பாக இவ்வாரம் தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானம் எடுக்கும் என்றும் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கையில் 64 கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாக உள்ளன.

## திருமலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கட்டடம் ஒன்றுக்குள் தடுத்து வைத்திருந்த குற்றத்துக்காகவே இவர்களுக்கு தடை உத்தரவு விதிக்கப்பட்டதாக திருகோணமலை வளாகத்தலைவர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தெரிவித்தார்.

குறிப்பிட்ட 16 மாணவர்களுக்கும் விடுதிகளிலிருந்தும் அகற்றப்பட்டுள்ளதாக வளாகத்தலைவர் பேராசிரியர் கனகசிங்கம் தெரிவித்தார். குறிப்பிட்ட மாணவர்கள் தொடர்பாக நிர்வாக மட்டத்தில் விசாரணைகள் நடத்தப்படும் என்றும் தெரிவித்த வளாகத்தலைவர் இவர்களது பரீட்சை முடிவுகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஹசனலிக்கு முழுமையான ஆதரவு

## மாகாண சபை உறுப்பினர் ஜவாத்

(யூ.கே. காலித்தீன்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளரும், அதன் உச்சபீட உறுப்பினரும், கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான கே.எம்.அப்துல் ரஸ்ஸாக் (ஜவாத்) அவர்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்று அணியாக செயல்படும் அதன் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரீ. ஹசன் அலியுடன் இணைந்துகொள்ளப்போவதாக கசிந்த சில செய்திகள் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் ஜவாத் அவர்களை தொடர்புகொண்டு வினவியது.

அதற்கு அவர்......

ஹசன் அலி விவகாரமானது, நேற்று முன்தினம் நிந்தவூரில் இடம்பெற்ற கூட்டத்தின் இறுதியில் ஹசன் அலி தமது பேச்சில், அவர் வேறு எந்த அணியுடனும் இல்லை என்ற அவரது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருந்தார். அவரின் இந்த நிலைப்பாட்டை நான் வரவேற்கின்றேன்.

ஆனால், நியாயபூர்வமாக பாதிக்கப்பட்ட ஹசன் அலியின் நியாயங்களை, நியாயபூர்வமற்ற ஒரு அணியானது தமது கைகளுக்குள் கொண்டுவந்து, அவர்கள், தாம், நியாயவாதிகள் என் பதை நிரூபணம் செய்ய முயற்சிக்கின்றனர். என்பதை அக்கூட்டமானது வெளிக்காட்டியிருந்தது.

ஹசன் அலிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்ற விவகாரத்தை நூற்றுக்கு நூறு வீதம் ஆமோதிக்கும் ஒருவனாகவே நான் இருந்து கொண்டிருக்கின்றேன்.



எமது கட்சியின் உயர்பீடக் கூட்டங்களில் செயலாளர் தொடர்பான சர்ச்சைகள் எழுந்த சமயங்களிலெல்லாம், அவர் சார்பாக வாதாடும் தனியொருவனாக நான் மட்டுமே இருந்துவந்துள்ளேன். அதற்கு காரணம் அவர் மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களுடன் சேர்ந்து இக்கட்சியை உருவாக்க பாடுபட்டவர்களில் ஒருவர் என்பது மட்டுமல்லாது, தலைவரின் மறைவுக்குப் பின் கட்சியின் அடிப்படை கொள்கைகளை காக்கும் பணிகளை செய்தவர்களில் பிரதானமானவராகவும் காணப்படுவதாகும்.

கட்சியின் நடவடிக்கைகள் மீளமைக்கப்படவேண்டும் என்பதில் எனக்கு மாற்று கருத்துக்கள் இல்லை.

ஏனெனில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆனது இலங்கை முஸ்லிம்களுக்காக தூய்மையானவர்களால், தூய மையான சிந்தனைகளுடன் உருவாக்கப்பட்ட ஒரு கட்சியாகும்.

இந்தக் கட்சியில் இருந்து வெளியேறியாராவது இக்கட்சியை அழிக்க நினைத்தால் அது பகல் கனவாகவே அமையும்.

ஆனபடியால் ஹசன் அலி அவர்கள் இந்தக் கட்சிமீது உண்மையான பற்றுறுதியுடையவராக இருந்தால், அவர் இக்கட்சியை அழிக்க நினைக்கும் சக்திகளுக்கு துணைபோய்விடக்கூடாது. என்பதுடன் இக்கட்சியின் வரம்புக்குள் இருந்து கொண்டு இக்கட்சியின் மீட்புப் புரட்சியில் ஈடுபடுவாரேயானால் அவரது போராட்டத்திற்கு உறுதுணையாக நிற்க நான் எப்போதும் சித்தமாகவுள்ளேன் என்று கூறினார்.

## அமெரிக்காவுடனான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

இலங்கை அமெரிக்காவுக்கிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் நேற்றுடன் நிறைவடைந்ததையிட்டு, மீண்டும் அரசாங்கம் மேற்படி ஒப்பந்தத்தை புதுப்பிக்க முயற்சிக்கின்றதா? என்பது தொடர்பாக ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்த, மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை சார்பாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய அமெரிக்கா சார்பாக இலங்கைக்கான அப்போதைய அமெரிக்க தூதுவர் பெரர்ட் பிலேக் ஆகியோர் 2007 ஆம் ஆண்டு மேற்கொண்ட 10 வருட இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் மேலும் 10 வருடங்களுக்கு நீடிப்பது குறித்து கூறப்பட்டுள்ளதோடு, அரசாங்கம் இரகசியமாக மேலும் 10 வருடங்களுக்கு நீடிக்க முயற்சிக்கின்றதா? என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்ததாவது,

கடந்த அரசாங்கத்தில் மேற்படி ஒப்பந்தம் இரகசியமான முறையிலேயே கைச்சாத்திடப்பட்டிருந்தது. இந்த அரசாங்கமும் அவ்வாறு செய்திட முற்படுகின்றதா? இங்கு யுத்த சூழ்நிலையொன்றில்லாதபோது இலங்கைக்கு இதனால் எவ்வித பயனும் இல்லை. மாறாக இலங்கையின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் பாதிப்பாகவே அமைந்துவிடும். அமெரிக்கா இந்தியா அல்லது சீனாவுடன் யுத்த நிலையொன்றை உருவாக்கும்போது நாம் அமெரிக்காவுக்கு உதவவேண்டியேற்படும். இதனால் இலங்கைக்கு எவ்வித பயனும் இல்லை. சீனாவையும் இந்தியாவையும் பகைத்துக்கொள்வதைத் தவிர எவ்வித இலாபமும் இல்லை. பலமான இரண்டு நாடுகள் இவ்வாறான ஒப்பந்தங்கள் மேற்கொள்வதில் பிரச்சினையில்லை. இதுதொடர்பாக பாராளுமன்றில் கேள்வியெழுப்பவுள்ளோம்- என்றார்.

## அதிசயிக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

குண்டு துளைக்காத கவசம் பொருந்தியது.

காரின் டயரை சேதப்படுத்த முடியாது. அப்படியே அது சேதப்படுத்தப்பட்டால். கார் ரிம்மில் ஓடக் கூடியது (டயரே தேவை இல்லை)

குறித்த இந்த காருக்குள், எந்திர துப்பாக்கிகள் உள்ளது. அதுபோக ரம்ப் அமர்ந்திருக்கும் பக்கம், அமெரிக்க பாதுகாப்பு சேவையோடு மற்றும் அமெரிக்க உப ஜனாதிபதியோடு உடனே தொடர்பு ஏற்படுத்த கூடிய தொலைபேசி உள்ளது.

காருக்குள் ஆக்சிஜன் சிலிண்டர் இருப்பதனால் வெளிக்காற்றை சுவாசிக்க வேண்டிய அவசியம் இல்லை.

காரில் இருக்கும் பெற்றோல் டேங் கூட உள்ளே தான் உள்ளது. இதனால் அதுவும் பாதுகாக்கப்படுகிறது.

மேலும் காரில் இருந்து வெளியே டியர்காஸை பீச்சியடிக்கும் வசதி உள்ளது. இதனால் காருக்கு அருகே எவராலும் வர முடியாது.

காருக்கு கீழே குண்டு வெடித்தால், அதனை தாக்கு பிடிக்க கூடிய உலோகம் உள்ளது.

வேறு வாகனங்களால் வந்து இடித்தால் கூட, அதனை தாங்கும் அளவு எல்லா இடங்களிலும் உலோகங்கள் உள்ளன.

அதுபோக ஜீ.பி.எஸ். ரக்கிங், வாகனத்தை ஓட்டும் சாரதியின் கண்ணாடி 5 அடுக்குகளை கொண்டது. எனவே முன்னால் இருந்து யார் சுட்டாலும் காரை பயப்படாமல் ஓட்டலாம்.

எனவே 100 பேர் சேர்ந்தாலும் ஒன்றுமே செய்ய முடியாது. அப்படியான காரில் தான் டொனால் ரம்ப் பயணம் செய்கிறார்.

## உள்ளூராட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கை கிடைக்கும்வரை தேர்தல் நடத்தப்படமாட்டாது என்றும் அவர் கூறினார்.

சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.அவர் மேலும் கூறுகையில்;

2013 இல் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்டது.அதில் குறைபாடுகள் இருக்கின்றன என்று இப்போது எம்பிக்கள் கூறுகின்றனர்.அது உண்மைதான். இருந்தாலும்,சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் அது தொடர்பில் திருத்தத்தை-எதிர்ப்பை முன்வைத்திருந்தால் இப்போது அதைப்பற்றிக் கூறிக்கொண்டிருக்கத் தேவை இல்லை. இதனால் இச்சட்டமூலம் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டது.இதனைத் தொடர்ந்து எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது.இதற்கு மூன்று வருடங்கள் சென்றன.எல்லை நிர்ணய அறிக்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதைத் தொடர்ந்துதான் அதில் குறைபாடுகள் இருப்பதை மக்கள் கண்டறிந்தனர்.

மக்களும் அரசியல் கட்சிகளும் இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த அறிக்கையின் அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று கூறினர். இதனால் நான் இது தொடர்பில் மேன்முறையீட்டு முறைமையைத் தோற்றுவித்தேன்.

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் நாடு பூராகவும் இருந்து எமக்கு கிடைத்தன.இதற்காக ஒரு வருடத்தை செலவழித்தேன். முறைப்பாடு அறிக்கையை வர்த்தமானியில் பிரசுரித்தேன். இது தொடர்பில் இன்னுமோர் முறைப்பாடு அறிக்கை கிடைக்க வேண்டியுள்ளது.அது கிடைக்கும்வரை தேர்தலை நடத்தமாட்டேன்.இதைத் தவிர தேர்தலை ஒத்துப்போடுவதற்கு அரசுக்கு எந்தவொரு தேவையும் இல்லை.

சிறு கட்சிகளுக்கும் சிறுபான்மை இனக் கட்சிகளுக்கும் பாதிப்பு இல்லாதவகையில் புதிய தேர்தல்முறைமை தயாரிக்கப்படும்.பெண்கள் 25 வீதமும் இளைஞர்கள் 30 வீதமும் உள்ளடக்கப்படுவர்.மோசடிகள் நிறைந்த விருப்பு வாக்குமுறைமை இல்லாது செய்யப்பட்டு அந்தந்த தொகுதிகளுக்கு பொறுப்புக் கூறும் வகையில் 70 வீத தொகுதிவாரியும் 30 வீத பிரதிநிதித்துவ முறைமையும் கலந்த புதிய தேர்தல் முறைமை உருவாக்கப்படும்.அந்த அடிப்படையில் மேலும் புதிய உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்

## இலங்கைக்கெதிரான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஸாந்த வரசிங்க கூறுகையில்;

ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 34 ஆவது கூட்டத் தொடர் இப்போது தொடங்கியுள்ளது.ஆனால், இது தொடர்பில் மக்களின் சரியான தெளிவு இல்லை.2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மனித உரிமை பேரவையில் அமெரிக்காவின் அனுசரணையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

ஆரம்பத்தில் அந்தத் தீர்மானத்தை எதிர்த்தாலும்கூட பின்பு அது தொடர்பில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து இலங்கை அதற்கு இணை அனுசரணை வழங்கியது.இதன் காரணமாக சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு இருந்த அழுத்தம்-அச்சுறுத்தல் தனியத் தொடங்கியது.ஆனால்,இவை முழுமையாக நீங்கவில்லை.

மஹிந்த ஆட்சியில் அமெரிக்கா இலங்கை தொடர்பில் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.இலங்கை தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் அப்போதைய ஒபாமா நிர்வாகம் இருந்தது.இதனால்,ஒருவகையான அச்சத்துக்குள் நாடு தள்ளப்பட்டது.

ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின் பிரதமர் ரணிலும் ஜனாதிபதி மைத்திரியும் சேர்ந்து இந்த அச்சத்தை குறைத்தனர். ஆனால்,குற்றச்சாட்டு அப்படியேதான் உள்ளது. சூடுதான் குறைந்திருக்கின்றது. ஆனால்,இப்போது ஒபாமா நிர்வாகம் மாறி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பதால் இது இலங்கைக்கு சாதகமான நிலைமையாகும்.ஆனால்,இந்த சாதகத்தன்மையை நாம் பயன்படுத்துகிறோமா என்பது சந்தேகம்தான்.

மேற்படி ஐ.நா தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிபதிகள் தொடர்பில் ஜனாதிபதி உடன்படவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால்,இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு செயற்படும் விதம் சிக்கல் நிறைந்ததாக காணப்படுகின்றது.பழைய ஒபாமா நிர்வாகத்தை திருப்திப்படுத்துவதற்காக செயற்படுவது போல் எமக்குத் தெரிகின்றது.

டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தை பயன்படுத்தி மேற்படி ஜெனிவா தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு அல்லது திருத்துவதற்கு எம்மால்முடியும். ஆனால்,வெளிவிவகார அமைச்சர் அதைச் செய்யத் தவறிவிட்டார்.அதைவிட்டுவிட்டு இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கால அவகாசம் கேட்கின்றார்.

இது நாட்டுக்கு ஆபத்தான போக்காகும்.தமக்குத் தேவையான விதத்தில் தீர்மானத்தை திருத்துவதற்கு அல்லது ரத்துச் செய்வதற்கு மங்கள சமரவீர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடாகும் .-என்றார்.

## உள்ளூராட்சி மன்ற...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒத்திப்போடாமல் உடனடியாக நடத்துவதன்மூலம்தான் மக்களின் வாக்குரிமை பாதுகாக்கப்படும்.பல காரணங்களைக் கூறிக்கொண்டு அரசு இந்தத் தேர்தலை ஒத்திப்போடுவதை எம்மால் ஏற்கமுடியாது.

அதாவுல்லா மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சராக இருந்தபோது புதிதாக நிறைவேற்றப்பட்ட தேர்தல் முறைமைதான் தேர்தலை நடத்துவதற்குத் தடையாக இருக்கின்றது என்று காரணம் சொல்லப்படுகின்றது.அது உண்மை.இந்தத் தேர்தல் சட்டமூலத்தில் இருக்கின்ற குறைபாடுகள் நிவர்த்திசெய்யப்படும் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் தான் அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

அப்போதைய மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சராக இருந்த அதாவுல்லா மேற்படி வாக்குறுதியுடன் அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றினார். அப்போது மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் இனவாதத்தையும் ஜாதிப் பாகுபாட்டையும் தூண்டுவதாகவே இருந்தது. அதனால்தான் மீண்டும் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதற்கு நீண்ட காலம் சென்றாலும்கூட ,இப்போது அந்தப் பணி நிறைவடைந்துள்ளது.இருந்தாலும்,அதாவுல்லா காலத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் முறைமையின்கீழ் தேர்தலை நடத்தப் போனால் பல பிரச்சினைகள் உருவாகும்.

58 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் கூறுகின்றார்.மறுபுறம்,தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை.பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும்,அதை எப்படி உள்வாங்குவது என்று குறிப்பிடப்படவில்லை.மேலும்,இனவாதத்தை அது தூண்டிவிடும்.

இவ்வாறு அதிகமான பிரச்சினைகள் அதில் உள்ளன.அதற்கு ஒரே தீர்வு அந்தச் சட்டத்தைத் திருத்துவதுதான் அதற்கு அதிக காலம் செல்லும்.இப்போதே இரண்டு வருடங்களைத் தாண்டிவிட்டோம்.இனியும் காலம் கடத்த முடியாது. ஆகவே,முதலில் நடைமுறையில் உள்ள முறைமையின்கீழ் தேர்தலை நடத்திவிட்டு அடுத்த தேர்தலில் புதிய முறைமையைப் பயன்படுத்துமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆனால்,எல்லை நிர்ணய முறைப்பாடுகளை பெறுவதற்கு நியமிக்கப்பட்ட அசோகா பீரிஸ் குழு அதன் இறுதி அறிக்கையை வழங்கும் வரை தேர்தலை நடத்தமாட்டோம் என்று அமைச்சர் பைசர் முஸ்தபா கூறுகின்றார்.அந்த அறிக்கை கிடைத்தாலும் அதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தேர்தல் திணைக்களத்தின் திருத்தங்களை உள்ளடக்கி சட்டமூலம் ஒன்றைத் தயாரித்து நாடாளுமன்றத்துக்கு கொண்டு வருவதற்கு எப்படியும் ஒரு வருடம் சென்றுவிடும். ஆகவே,இன்னும் ஒரு வருடத்துக்கு தேர்தல் நடத்தப்படமாட்டாது என்பதை உறுதியாகக் கூறலாம்.என்றார்.

## மூன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்கு தெளிவுபடுத்த நீதி, நேர்மையான நாடு, நீதியான சமூகம், சுதந்திரமான மனிதன் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னரான இலங்கையை நான்கு உயர் குலத்தினரே ஆட்சி செய்துள்ளனர். உயர் குலத்தினரிடையே இனவாதமில்லை. அவர்கள் இன முரண்பாடுகளையும் இனவாதத்தையும் தோற்றுவித்து அவர்களின் இருப்பை உறுதிசெய்துகொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் சனியன்று இரவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

சுதந்திரத்தின் பின்னரான 70 ஆண்டுகளை நான்கு வலவுக் காரர்களே ஆண்டுள்ளனர். பேரந்தலே வலவ்வ, ஹொரகொல்ல வலவ்வ, கொள்ளுப்பிடிய வலவ்வ, மெதமுலன வலவ்வ ஆகியனவே அவை. அவர்கள் தமது இருப்புக்காக மக்களை ஒன்றுபட விடமாட்டார்கள். இனவாதத்தை பரப்பி அரசியல் இலாபம் தேடுகின்றனர்.

பொருளாதாரம் ஸ்திரமடையாது நாட்டின் எந்த துறையும் முன்னேற்றமடையாது சாத்தியமில்லை. பொருளாதாரம் சீர்குலைந்த நிலையில் சமூக நீதியும், சமத்துவமும் மலராது. கடன் பெறுவதை பெரும் வெற்றியாக கருதும் தலைவர்களையே நாம் இதுவரை கண்டுள்ளோம்.பெற்றுக்கொண்ட கடன்களுக்கு பயன்மிக்க வேலைகள் நடந்ததாகவும் இல்லை. நாட்டின் மொத்த கடன் தொகை எவ்வளவு என்று பிரதமருக்கும் தெரியாது. ஊழல் ஒழிக்க வந்த அரசிலும் ஊழல். இந்த அரசாங்கத்தையும் துரத்தியடிக்க வேண்டும். ஆனால் பழைய முறையில் துரத்தப்படுவதில் பயனில்லை. மீண்டும் மஹிந்தவே ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார். சுதந்திர கட்சிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் மேலும் 50 வருடங்கள் ஆட்சி நடத்த வாய்ப்பளித்தாலும் நாடு இதே நிலையில்தான் இருக்கும். மக்களுடன் ஒன்றித்துள்ள கட்சியுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற மூவினத்தினதும் பெரும்பான்மையான மக்கள் ஒன்றுபட வேண்டும்.

நாம் இனவாதத்தை ஒருபோதும் ஆதரித்ததில்லை. இனியும் இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை. மொழி, மத உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். யாரையும் மதத்தின் பெயரால் வற்புறுத்தவும் முடியாது. யாருக்கும் பர்தாவை கழற்றும்படி கூறவும் முடியாது. பல கலாசார அமைப்புகள் நாட்டுக்கு அழகு. ஒரு இனவாதத்துக்கு எதிராக இன்னோர் இனவாதத்தால் ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாது. இனவாதத்தால் இனவாதத்தை தோற்கடிக்கவும் முடியாது. ஆட்சி என்பது உயர் குலத்தில் இருந்து பொது மக்கள் கைகளுக்கு வரவேண்டும். இனி மேலும் இனவாத தலைதூக்க விடமாட்டோம்.

இந்நிகழ்வில் கொழும்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் வை.எம்.இப்ராஹிம், மனோ தத்துவவியலாளர் எம்.இம்றான், முஸ்லிம் கவுன்சில் ஒப் ஸ்ரீ லங்காவின் தலைவர் என்.எம்.அமீன், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் நஜா முஹம்மத் உட்பட அரசியல், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்கவுக்கு முஸ்லிம்கள் சார்பில் விசேட விருதொன்றும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கொழும்பு வர்த்தகர்கள் சார்பில் யுனைட்டட் ட்ரேடர்ஸ் உரிமையாளர் செல்லையாவால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

## மீண்டும் சர்ச்சையில் உமர் அக்மல்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான உமர் அக்மல் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. போக்குவரத்து விதிமுறை மீறல் காரணமாக கடந்த வியாழக்கிழமை இந்த வாக்குவாதம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

உமர் அக்மலுடைய காரின் இலக்கத் தகடு போக்குவரத்து விதிமுறைகளுக்கு முரணாக வேறுபட்ட வடிவில் அமைக்கப்பட்டிருந்ததாகவும் அது குறித்து லாகூரில் போக்குவரத்து பொலிஸார் கேள்வி எழுப்பியபோது வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த சம்பவம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த உமர் அக்மல், பொலிஸார் என்னுடைய காரை தடுத்து நிறுத்தினர். அதன் பின்னர் தவறான வார்த்தைகளை பயன்படுத்தினர். அத்துடன் காரின் இலக்கத் தகட்டை நானே கழற்ற வேண்டும் என்றும் கூறினர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அக்மல் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரராக இருப்பினும் இதுபோன்ற சர்ச்சைகளில் அவ்வப்போது சிக்குவது வழக்கமான விடயமாகும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு போக்குவரத்து பாதுகாப்பு தடையை உடைத்துச் சென்ற உமர் அக்மல் பொலிஸாருடன் தகராறில் ஈடுபட்டதுடன் ஒருநாள் சிறைத்தண்டனையும் அனுபவித்திருந்தார். அதுபோன்று லாகூர் கடாபி கிரிக்கெட் மைதானத்திற்குள் காரை அனுமதிக்காததால் கவலாளியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனுஷ்க - குசல் அபாரம் இலங்கை அபார வெற்றி



இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான தனுஷ்க குணதிலக மற்றும் குசல் ஜனித் பெரேராவின் இணைப்பாட்டத்தால் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கெதிராக இலங்கை ஏ அணி 2ஆவது ஒருநாள் போட்டியில் வெற்றியைப் பதிவு செய்தது.

நேற்றுமுன்தினம் தம்புள்ள கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை ஏ அணி டக்வர்த் லூவிஸ் முறைப்படி 119 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து லயன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 42.5 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து வெறும் 217 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது. இதில் இங்கிலாந்து அணி சார்பில் லிவிங்ஸ்டன் அதிகபட்சமாக 94 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். சிறந்த முறையில் பந்துவீசிய இலங்கை அணியின் மிலிந்த சிறிவர்தன 40 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

எனவே 218 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பமே அதிரடியான ஆட்டத்தினை வெளிக்காட்டியது. இதன்படி, 28.4ஓவர்களில் 201 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது போதிய வெளிச்சமின்மை காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டு, டக்வர்த் லூவிஸ் முறைப்படி இலங்கை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணி சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய குசல் பெரேரா 70 ஓட்டங்களையும், தனுஷ்க குணதிலக சதம் கடந்து 88 பந்துகளுக்கு 121 ஓட்டங்களை அதிரடியாக பெற்றுக் கொண்டார். குசல் பெரேரா, தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரில் மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்த நிலையில் ஒருநாள் அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட, தனுஷ்க குணதிலக, தென்னாபிரிக்க தொடரில் இடம்பெற்றிருந்தாலும் இறுதி நேரத்தில் காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இத்தொடரில் திறமைகளை வெளிப்படுத்தினால் பங்களாதேஷுடனான ஒருநாள் தொடரில் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் இவ்விரு வீரர்களுக்கும் கிட்டும். இந்நிலையில், 5 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி 2- 0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்க, 3ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 06 ஆம் திகதி குருநாகல் வெலகெதர மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## தடகளப் போட்டிகளுக்கான பயிற்சியாளர் நியமிக்கப்படுவார்

### விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர





பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை வீரர்களை சர்வதேச அளவில் வெற்றி பெறச் செய்யும் நோக்கில் தடகளப் போட்டிகளுக்கென்று ஒரு தலைமைப் பயிற்சியாளர் நியமிக்கப்படுவார் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். அத்தோடு அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அநேகமாக கென்ய நாட்டு பயிற்சியாளர் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்கலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு ஆசிய போட்டிகள் மற்றும் 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கான இலங்கை அணியை தயார்படுத்துவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள வீர, வீராங்கனைகளுக்கான ஊட்டச்சத்து நிதிக் கொடுப்பனவு திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை விளையாட்டுத் துறை அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் சர்வதேச தடகளப் போட்டிகளுக்கான இலங்கை அணியை உருவாக்கும் செயற்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக வீர, வீராங்கனைகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு மாதாந்தம் 35 ஆயிரம் ரூபா வீதம் விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்படவுள்ளது. இக்கொடுப்பனவு திட்டத்திற்கு மேலதிகமாக திறமைகளை வெளிப்படுத்துகின்ற வீரர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளோம். அத்துடன் அறிவிக்கப்பட்டுள்ள இக்குழாமில் உள்ள அனைத்து வீரர்களையும் இந்தியாவிற்கு அனுப்பி பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருவதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். அதன்படி முதல் கட்டமாக 25 வீர, வீராங்கனைகளுக்கும் 20 பயிற்சியாளர் களுக்கும் விசேட கொடுப்பனவுகளை அமைச்சர் வழங்கினார்.

இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள மெய்வல்லுனர் போட்டிகளை கருத்தில் கொண்டு குறிப்பாக 2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டி, 2017 இல் இடம்பெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டி, 2018 இல் இடம்பெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டி ஆகியவற்றை கருத்தில் கொண்டு போட்டிகளில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகளுக்கு மேற்படி ஊட்டச்சத்து உணவுகளுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. 20 அணிகளைச் சேர்ந்த 25 வீர, வீராங்கனைகளுக்கு குறித்த ஊட்டச்சத்து உணவுகளுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர வழங்கிவைத்ததுடன், இதில் ஒலிம்பிக் குழாமில் இடம்பெற்ற வீரர்களுக்கு மாதாந்தம் 75 ஆயிரம் ரூபாவும், ஆசிய குழாமில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு மாதாந்தம் 30 ஆயிரம் ரூபாவும், கனிஷ்ட குழாமில் உள்ள வீரர்களுக்கு மாதாந்தம் 15ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



2017ஆம் ஆண்டிற்கான கல்பிட்டி கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த 20ஆம் திகதி குறஞ்சிப்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் 18,20 வயதின் கீழ் கரப்பந்தாட்ட போட்டியில் பங்குபற்றிய பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம் வெற்றியீட்டி சம்பியனாக இரண்டு பிரிவிலும் தெரிவாகியது. 18 வயது அணியினர் இறுதிப்போட்டியில் பூளாச்சேனை முஸ்லிம் மாகா வித்தியாலயத்துடன் விளையாடி தொடர்ச்சியாக இரண்டு செட்களிலும் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை பொற்றுக் கொண்டது. 20 வயது அணியினர் முதலைப்பாலி முஸ்லிம் வித்தியாலத்துடன் இறுதிப்போட்டியில் பங்கு பற்றி இரண்டு செட்களிலும் தொடர்ச்சியாக வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தினை பெற்றுக் கொண்டது. அத்துடன் இம்மாணவர்களுக்கு பயிற்சி வழங்கிய உடற்கல்வி ஆசிரியர்களான ஏ. எச். எம். ரஜாப்டீன் மற்றும் எஸ். ஐ. எம். அம்ஜத், அதிபர் எம்.எச்.ஏ ஹமீட் ஹான், உதவிய ஆசிரியர்களுக்கும் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. படத்தில் வெற்றியீட்டிய இரண்டு அணியினரையும் காணலாம். ( பள்ளிவாசல்துறை. எஸ் ஐ எம் அம்ஜத்)

**டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டம்:**

## 2ஆவது முறையாகவும் சம்பியனானது கலம்போ எவ்.சி. கால்பந்துக் கழகம்







பீ. எப்.எம் றிஷாட்

டயலொக் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் தீர்மானம் மிக்க இறுதிப் போட்டியில் ரினௌன் விளையாட்டுக் கழகத்தை 3-1 என்ற கோல்கள் கணக்கில் விழ்த்தியதன் மூலம் கொழும்பு எவ்.சி கால்பந்துக் கழக அணி சம்பியன் தொடர்ச்சியாக 2ஆவது முறையாக கிண்ணத்தை தக்க வைத்துக்கொண்டது.

இம்முறை சுப்பர் 8 சுற்றுத்தொடரில் கடந்த வாரம் வரை முன்னிலையில் இருந்த கொழும்பு கால்பந்துக் கழகம், ப்ளூ ஸ்டார் அணியுடனான போட்டியில் தோல்வியை சந்தித்ததால் தரப்படுத்தலில் பின்னடைவை சந்தித்தது. இதனால், இறுதிப் போட்டியை கட்டாயம் வெற்றி பெற வேண்டுமென்ற நிலைக்கு கொழும்பு அணி தள்ளப்பட்டது.

மறுமுனையில் மிகவும் பலமான நிலையில் காணப்பட்ட ரினௌன் அணி, சுபர் 8 சுற்றில் முதல் போட்டிக்குப் பின்னர் எந்தப் போட்டியிலும் புள்ளிகளை பறிகொடுக்கவில்லை. கொழும்பு அணியுடனான தொடரின் இறுதிப் போட்டி சமநிலையில் முடிந்தாலும் கிண்ணத்தை வெற்றி பெறும் வாய்ப்பு ரினௌன் அணிக்கு இருந்தது. இந்நிலையில் கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் மின்னொளிக்கு மத்தியில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற சம்பியனைத் தெரிவு செய்யும் இந்த முக்கிய போட்டியின் ஆரம்ப நிமிடங்களில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதின.

இரு அணிகளும் மாறி மாறி வாய்ப்புகளை உருவாக்கினாலும் ஆரம்ப நிமிடங்களில் யாராலும் கோலினைப் பெற முடியாமல் இருந்தது. எனினும் போட்டியின் 29ஆவது நிமிடத்தில் ஜொப் மைக்கல், போட்டியின் முதல் கோலை ரினௌன் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார். எதிரணி ஒரு கோலைப் பெற்றதன் பின்னரும் கொழும்பு அணி தொடர்ந்து ஆதிக்கத்தை தக்க வைத்துக்கொண்டது. அதன் பலனாக 36ஆவது நிமிடத்தில் சர்வானின் உள்ளீட்டை டேவிட் ஓசாஜி கோலாக மாற்றினார். எனினும், டேவிட் ஓசாஜி தனது சட்டையை உயர்த்தி கோல் மகிழ்ச்சியை கொண்டாடியதன் காரணமாக அவருக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது. இதன்படி போட்டியின் முதல்பாதி 1க்கு 1 என சமநிலையில் நிறைவடைந்தது. முதலாவது பாதியைப் போன்றே இரண்டாவது பாதியையும் இரு அணிகளும் சம பலத்துடன் ஆரம்பித்தது. எனினும் போட்டியின் 56ஆவது நிமிடத்தில் கொழும்பு எவ்.சி அணிக்காக மற்றொரு கோலினை தனுஷ்க மதுஷங்க பெற்றுக்கொடுத்தார். இறுதி நிமிடங்களில் கோல் ஒன்றினைப் பெற ரினௌன் அணி வீரர்கள் பலமாக முயற்சி செய்த போதிலும், அவர்களால் இறுதி வரை ஆட்டத்தை சமநிலைப்படுத்துவதற்கான கோலினை போட முடியாமல் போனது. எனினும், போட்டியின் இறுதி நிமிடத்தில் அஹமட் ஷஸ்னி கொழும்பு அணிக்கு மூன்றாவது கோலினைப் பெற்றுக்கொடுக்க, இறுதியில் 3க்கு 1 என்ற கோல்கள் கணக்கில் கொழும்பு எவ்.சி வெற்றிகொண்டு தொடர்ந்து இரண்டாவது முறையாக டயலொக் சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை தம்வசப்படுத்தியது. முன்னதாக இராணுவப்படை அணி 7-3 என்ற கோல்கள் கணக்கில் ப்ளூ ஸ்டார் அணியை வீழ்த்தியதன்மூலம் ப்ளூ ஸ்டாரின் சம்பியன் கனவு வீண்போனமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்காவுக்கு முதலிடம்



சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ள புதிய ஒருநாள் தரவரிசைப் பட்டியலில் தென்னாபிரிக்க அணி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

நியூசிலாந்து அணியுடனான ஒரு நாள் தொடரை 3க்கு 2 என்ற கணக்கில் கைப்பற்றியதன் மூலம் தொடர்ச்சியாக 7ஆவது முறையாக ஒருநாள் தொடரொன்றைக் கைப்பற்றியதன் மூலம் தென்னாபிரிக்கவுக்கு இந்த முதலாவது இடம் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் இரண்டாம் இடத்தை அவுஸ்ரேலிய அணியும், மூன்றாம் இடத்தை நியூசிலாந்து அணியும் பெற்றுள்ளது.

இதேவேளை இந்தியா, இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகள் முறையே, நான்காம், ஐந்தாம் மற்றும் ஆறாம் இடங்களை பெற்றுள்ளன.

## ரென்ஷா, மார்ஷ் அரைச்சதம்; வலுவான் நிலையில் ஆஸி.



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலியாவின் ரென்ஷா, ஷோன் மார்ஷ் அரைச்சதம் அடிக்க அவுஸ்திரேலிய அணி 48 ரன்கள் முன்னிலை பெற்றது.

இந்தியா வந்துள்ள வுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் பெங்களூரில் நடைபெற்று வருகிறது. முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 189 ஓட்டங்களை எடுத்தது. முதல் நாள் ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களை எடுத்திருந்தது. வோர்னர் (23), ரென்ஷா (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. அஷ்வின் 'சுழலில்' வோர்னர் (33) சிக்கினார். அதன்பின்னர் ஸ்மித் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறப்பாக செயல்பட்ட ரென்ஷா (60) அரைச்சதம் கடந்தார். அதன்பிறகு மிட்சல் மார்ஷ் டக்-அவுட்டானார். நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷோன் மார்ஷ் (66) அரைச்சதம் அடித்தார். இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில், அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்கு 237 ரன்கள் எடுத்து, 48 ரன்கள் முன்னிலை பெற்றிருந்தது.

## இந்திய மண்ணில் லயன் புதிய சாதனை



இந்திய மண்ணில் 8 விக்கெட்டுகளை வீழ்த்தி அவுஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் நெதன் லயன் சாதனை படைத்துள்ளார். நேற்று முன்தினம் ஆரம்பமான பெங்களூர் டெஸ்டில் இந்திய அணியை மிரட்டிய அவுஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் லயன், 22.2 ஓவர்களில் 4 மெய்டனுடன் 50 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 8 விக்கெட்டுகளை சாய்த்தார். இதன் மூலம் அவர் ஏராளமான சாதனைகளுக்கு சொந்தக்காரர் ஆகியிருக்கிறார். இந்திய மண்ணில் ஓர் இன்னிங்சில் வெளிநாட்டு பந்துவீச்சாளரின் மிகச்சிறந்த பந்துவீச்சாக இது பதிவாகியுள்ளது. இதற்கு முன்பு 1996ஆம் ஆண்டு கொல்கத்தாவில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளர் லான்ஸ் குளூஸ்னர் 64 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சிறந்த பந்துவீச்சாக இருந்தது.

அத்துடன், 1921ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக மெல்பேர்னில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்டில் அவுஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளர் ஆர்தர் மைலே 121 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை காலி கைப்பற்றினார். அவருக்கு பிறகு அவுஸ்திரேலிய சுழற்பந்துவீச்சாளரின் சிறந்த பந்துவீச்சாக இது அமைந்துள்ளது.

29 வயதான லயன் இதுவரை இந்தியாவுக்கு எதிராக 58 விக்கெட்டுகள் (12 டெஸ்ட்) கைப்பற்றியுள்ளார். இதன்மூலம் இந்தியாவுக்கு எதிராக அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற சிறப்பையும் பெற்றார்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 06ST MARCH 2017